வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 17.02.2024 சனிக்கிழமை | இதழ் : 48 | பக்கங்கள் : 12

# தாளையடி நீர் திட்டத்தின் மூலம் 3 இலட்சம் பேருக்கு குடிதண்ணீர்!

## அமைச்சர் ஜீவன் யாழில் தெரிவிப்பு

- இரணைமடு பிரச்னை அடுத்த வாரம் பாராளுமன்றில்!
- பாலியாறு குடிதண்ணீர் திட்டத்துக்கு ரூ. 25 கோடி!



யாழ்ப்பாணம், பெப்ரவரி 17

**தாளையடி நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் 3 இலட்சம் பேருக்கு விரைவில் குடிதண்ணீர் வழங்கப்படும் என நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

இரணைமடு பிரச்னைக்கு அனைத்து விவசாய அமைப்புகளுடனும், சிவில் அமைப்புகளுடனும், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுடன் கலந்துரையாடி அடுத்த பாராளுமன்ற அமர்வில் தீர்வு எடுக்கப்படும்.

பாலியாறு குடிதண்ணீர் திட்டத்துக்காக அரசாங்கம் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பாலியாறு திட்டத்தை கடன் மறுசீரமைப்புக்குப் பிறகு நடைமுறைப்படுத்தும் போது 5 வருட காலப்பகுதிக்குள் நிறைவு செய்ய முடியும் - என்று நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார். (ஐ)




# இந்தியத் தூதுவர் சந்தோஷ் நேற்று யாழ்ப்பாணம் வருகை!

யாழ்ப்பாணம், பெப். 17

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்ட அவர் காங்கேசன்துறை துறைமுகத்தையும் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து நேற்று மாலை, யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் தெரிவு செய்யப்பட்ட 200 குடும் பங்களுக்கு உலருணவு 11

# எனது நெறிப்படுத்தல் இல்லாமையும் இசைநிகழ்வு குழப்பத்துக்கு காரணம்!

## அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இசை நிகழ்வில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு தமது நெறிப்படுத்தல்கள் இல்லாமையும் ஒரு காரணம் என்று அமைச்சரும் ஒருங்கிணைப்பு குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இசை நிகழ்வில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு எங்களுடைய இளைஞர்களைப் பலரும் குறை கூறுகின்றனர். நிகழ்வில் இந்த நிகழ்வுக்குப் பின்னரும் இளைஞர்கள் சிலர் தாக்குதலுக்கு உள்ளாகினர் என்று அறிந்து கொண்டேன்.

நிகழ்வு தொடர்பில் யாழ். மாநகர சபை, யாழ்ப்பாண 11





# தலைமன்னாரில் 10 வயது சிறுமி வன்புணர்வின் பின் படுகொலை!

## 52 வயதான சந்தேகநபர் கைது

மன்னார், பெப். 17

தலைமன்னாரில் 10 வயது சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்டார். நேற்று அதிகாலை தென்னந்தோட்டம் ஒன்றிலிருந்து அவரின் உடல் மீட்கப்பட்டது. இந்தச் சம்பவம் மன்னாரில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, சிறுமியின் சடலம் மீட்கப்பட்ட தென்னந்தோட்டத்தின் காவலாளி சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் தனது 11

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் செய்தது தேர்தல் ஒப்பந்தமல்ல!

## தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவிப்பு

கொழும்பு, பெப். 17

ஐக்கிய மக்கள் சக்தியுடன் நாம் செய்தது சமூகநீதி ஒப்பந்தமே. தேர்தல் உடன்படிக்கை அல்ல. எமது ஒப்பந்தம் தொடர்பில் கேள்வி எழுப்பும் ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி, அநுரகுமாரவின் தேசிய மக்கள் சக்திக்கு நாம் அந்த ஒப்பந்தத்தை அனுப்பி வைக்கத் தயார். இது விடயத்தில் அவர்களின் பதில் என்ன என்று அறிவிக்க அவர்கள் தயாரா? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம். பி. கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை 11

# 2 சிறுவர்கள் கடலில் மாயம்!

நிந்தவூர், பெப். 17

கடற்கரையில் நின்று கைபேசியில் படம் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் இருவர் கடல் அலை இழுத்துச் சென்றதில் காணாமல் போயினர்.

நிந்தவூர் - மாட்டுப்பளை - சிங்காரதோப்பு கடற்கரையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், சாய்ந்தமருதை சேர்ந்த சிறுவர்களே காணாமல் போயினர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, மாளிகைக்காடு-சாய்ந்தமருது எல்லை வீதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை மாணவர்களான 13-15 வயதுக்குட்பட்ட 8 மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஜூம்மா 11

# ஒருங்கிணைப்பு குழு கூட்டம்: எம். பிக்கள் அதிருப்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். மாவடத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் எம். பிக்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

நேற்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்ட செயலகத்தில் 11

# தமிழிலும் முறையிடலாம்!

கொழும்பு,பெப். 17

பொலிஸாருக்கு தமிழ்மொழியில் முறைப்பாட்டை மேற்கொள்வதற்கான 107 அவசர இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இன்று சனிக்கிழமை முதல் முறைப்பாடுகளை தமிழில் தெரிவிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பயிற்சி அளிக்கப்பட்ட தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்த அவசர இலக்கம் ஜனாதிபதியின் 11

## மின் கட்டணத்தை குறைக்க கோரிய வழக்கு:

# பதிலளிப்பதற்கு அமைச்சருக்கு உயர்நீதிமன்று கால அவகாசம்!

கொழும்பு, பெப். 17

அதிகரித்த மின்சார கட்டணத்தை குறைக்குமாறு கோரி தாக்கல் செய்த வழக்கில் பதிலளிக்க மின்சக்தி அமைச்சர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உயர்நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

நேற்றைய தினம் உயர்நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே குமுதினி 11

# மயிலத்தமடு மேய்ச்சல்தரை திட்டமிட்டு அழிக்கப்படுகிறது

மட்டக்களப்பு, பெப். 17

மயிலத்தமடு மேய்ச்சல்தரையை பெரும்பான்மை இனத்தவர்கள் திட்டமிட்டு களைநாசினிகளை வீசியும், தீ வைத்தும் அழித்து வருகிறார்கள் என்று தமிழ் கால் நடை பண்ணையாளர்கள் கவலை தெரிவித் தனர்.

இது தொடர்பில் மாதவனை - மயிலத்தமடுவில் பாரம்பரியமாக கால்நடை பண்ணையாளர்கள் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

ஒரு கிராமத்தில் தீவிர கடவுள் பக்தியுள்ள ஒருவர் வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் அந்தக் கிராமத்தில் கடும் காற்றுடன்கூடிய மழை. மழை என்றால் பலத்த மழை. மெல்லமெல்ல வெள்ள நிலைமை கூடிக்கொண்டே போனது. வீடுகளுக்குள் மழைநீர் வருவதைக் கண்ட கிராம மக்கள் அங்கிருந்து வெளியேறி, அயல் கிராமத்திலுள்ள பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதென்று முடிவெடுத்து விட்டனர். கையில் கிடைத்த பொருட்களுடன் அவர்கள் கிராமத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

அப்போது இந்த கடவுள் பக்திக்காரனை அணுகி, நீயும் எங்களோடு வந்துவிடு என்றனர்.

ஆனால் அவனோ, "இல்லை நான் வரவில்லை நீங்கள் போங்கள். என்னைக் கடவுள் காப்பாற்றுவார்" என்று கூறிவிட்டான்.

இப்போது வெள்ளம் இன்னும் அதிகமாகிவிட்டது. வெள்ளத்தில் அகப்பட்டவர்களைக் காப்பாற்ற, படகுகளில் சிலர் வந்து மீதமிருந்தவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தனர். அப்போதும் படகில் வந்தவர்களோடு அவன் செல்ல மறுத்துவிட்டான்.

'என்னைக் கடவுள் காப்பாற்றுவார்' என்ற நம்பிக்கை அவனுக்கு அப்போதும் இருந்தது.

மழையோ தொடர்ந்து பெய்துகொண்டே இருக்க, வெள்ளமும் அதிகமாகிக் கொண்டே இருந்தது. இப்போது அவன் தனது வீட்டுக்கூரைமீது ஏறி நின்றுகொண்டிருந்தான்.

இப்போதும், கடைசியாக வெள்ளத்தில் அகப்பட்டிருப்பவர்களைக் காப்பாற்ற ஹெலிகொப்டரில் வந்து ஆட்களை மீட்டுக் கொண்டிருந்தார்கள். இவன் கூரைமீது ஏறி நிற்பதைக்கண்ட அவர்கள், இவனை மீட்பதற்காக ஹெலியிலிருந்து அவனை நோக்கி போட்ட கயிற்றைப் பற்றிக்கொண்டு மேலே ஏறுமாறு கேட்டார்கள். அப்போதும் அவன், "இல்லை இல்லை நீங்கள் போங்கள், கடவுள் என்னைக் காப்பாற்றுவார்" என்று அவர்கள் போட்ட கயிற்றைப் பிடித்து ஏற மறுத்துவிட்டான்.

இப்போது மழை வெள்ளம் அவன் தலைக்கும் மேலே போக, அவன் நீரில் மூழ்கப் போகின்ற நிலைமை.

இவன் "ஐயோ கடவுளே, உன்னை எவ்வளவு தூரம் நான் நம்பினேன். நீ என்னை வந்து காப்பாற்றுவாய் என்று நம்பிய என்னை கைவிட்டுவிட்டாயே" என்று கத்தினான்.

அவன் எதிரே வந்த கடவுள் சொன்னார்:

"உன்னைக் காப்பாற்ற, முதலில் உன் ஊரவர்களை அனுப்பினேன், பின்னர் படகை அனுப்பினேன் அதற்கும் நீ சம்மதிக்கவில்லை என்பதால் ஹெலிகொப்டரைக் கூட அனுப்பினேன். அதனையும் நீ கண்டுகொள்ளவில்லை. நான் கடவுள், உனக்கு உதவி செய்ய மட்டும்தான் என்னால் முடியும் நானே வந்து உன்னைக் காப்பாற்ற முடியாது... நீ இப்போது செத்துப்போ... அடுத்த பிறவியிலாவது புத்தியுடன் கடவுளின் உதவிகளைப் பற்றிப் பிடித்து தப்பிக்கப் பார்'!

தமிழ் அரசுக் கட்சி விவகாரம் இப்போது நீதிமன்றத்துக்கு சென்றுவிட்டது. இப்படி நடக்கும் என்பது எதிர்பார்த்ததுதான். அதற்கான காய்நகர்த்தல்கள் நடந்துகொண்டிருப்பது பற்றி இந்த ஊர்க்குருவிக்கு ஏற்கனவே ஊடக நண்பர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இதுபோன்ற ஒரு நிலைமை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஏற்பட்டிருந்தது. அது நீதிமன்ற விவகாரமாகியதால்தான் தமிழ் அரசு மறுவாழ்வு பெற்றது என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். ஆனால், நீதிமன்ற விவகாரத்தில் ஒரு முடிவு வந்த பின்னர் இன்று வரை தமிழர் விடுதலைக் கூட்டணியால் எழுந்திருக்க முடியவில்லை.

தமிழ் அரசு கட்சிக்குள் நடக்கும் இந்த கயிறிழுப்பில் யார் வெற்றி பெற்றாலும், இனி தமிழ் அரசு பழைய மிடுக்குடன் எழுந்து நடக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஒட்டுமொத்த விருப்பம். ஆனால், கட்சி இவ்வாறு சிக்கலுக்குள் இருப்பது நிச்சயம் தெற்குக்கு சந்தோசமான செய்திதான். தெற்கை சந்தோசப்படுத்தவே இதுபோன்ற சம்பவங்கள் உதவுமே தவிர, தமிழ் மக்களுக்கு நன்மை தரப்போவதில்லை.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறும் முடிவை எடுத்தபோதே தமிழ் அரசு பலவீனமான ஒரு நிலையை அடைந்தது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தம்மை சுதாகரித்துக் கொண்டு மேலும் சில கட்சிகளையும் இணைத்துக்கொண்டு பலமான கூட்டணியாக எழுச்சி பெற்றபோதிலும் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதால் அந்த கூட்டணி 'காணாமல் போன' நிலைமை. ஆனால், தமிழ் அரசின் தலைவராக சிறீதரன் தெரிவானதும் மீண்டும் கூட்டமைப்பை உருவாக்க அழைப்பு விடுத்தார். அதற்காக எந்த விட்டுக்கொடுப்புகளையும் செய்ய தயாராக இருக்கிறார் என்று அறிவித்ததும் ஒரு நம்பிக்கையைத் தந்தது. அந்த நம்பிக்கையும் இப்போது தகர்ந்துபோய் விடுமோ என்ற நிலைமை.

கடவுள் எப்போதும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருவாரே தவிர, தானே வந்து நமக்கு உதவிசெய்யமாட்டார் என்பதைப் புரிந்துகொண்டு, நமது அரசியல் தலைவர்கள் செயல்படவேண்டும்.! மேலே உள்ள கதையை எதற்காக எழுதினோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டியவர்கள் புரிந்துகொண்டால் சரி.!!

- ஊர்க்குருவி.

## புத்தூரில் உணவகத்துக்கு 65 ஆயிரம் ரூபாய் தண்டம்!

யாழ்ப்பாணம், பெப். 17

பழுதடைந்த உணவை நுகர்வோருக்கு வழங்கியமை உள்ளிட்ட குற்றங்களுக்காக புத்தூர் உணவகம் ஒன்றுக்கு 65 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது மல்லாகம் நீதிவான் நீதிமன்றம்.

புத்தூரில் உணவகம் ஒன்றில் பழுதடைந்த உணவு வழங்கப்படுவதாக பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து, பொது சுகாதார பரிசோதகர்களான கிருஷ்ணா, உதயபாலா ஆகியோர் தலைமையிலான குழு அங்கு சோதனையில் ஈடுபட்டது.

இதன்போது உணவகம் சுகாதாரமற்ற முறையில் இயங்கியமை உறுதிப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

உணவக உரிமையாளருக்கு எதிராக சுமத்தப்பட்ட 8 குற்றச்சாட்டுகளையும் அவர் ஏற்றுக்கொண்டதையடுத்து நீதிமன்றம் அவருக்கு 65 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. (ஐ)

## புலனாய்வுப் பிரிவுக்கு காணி வழங்குமாறு பரிந்துரை; வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் எதிர்ப்பு

வவுனியா, பெப். 17

வவுனியா பூங்காவீதியில் அமைந்துள்ள காணியில் தேசிய புலனாய்வு அலுவலகத்திற்கு இடம் வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் பரிந்துரைத்துள்ள நிலையில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் கு.திலீபன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது காணியற்ற அரச திணைக்களங்களான அரச ஒசுசல, புவிச்சரிதவியல் திணைக்களம்,தெங்கு அபிவிருத்திசபை,பனை அபிவிருத்திசபை, சமூக நீர்வழங்கல் திணைக்களம், தேசிய புலனாய்வு அலுவலகம், மற்றும் பொது அமைப்புக்களான முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், பேருந்து உரிமையாளர் சங்கம், பாரவூர்திச் சங்கம், ஓய்வூதியர் சங்கம் ஆகியன தமக்கு நகரப்பகுதியில் காணி ஒதுக்கித்தருமாறு வவுனியாபிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய குறித்த அமைப்புக்களுக்கு வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பகுதி மற்றும் திருநாவற்குளம் பாரவூர்தி தரிப்பிடம் ஆகியவற்றை பிரித்து வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது.

இதன்போது பூங்கா வீதியில் அமைந்துள்ள காணி தேசிய புலனாய்வு அலுவலகத்திற்கு வழங்குவதற்காக ஆளுநரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து காணியினை அவர்களுக்கு வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுதலைவர் தீலிபன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

புலனாய்வுப் பிரிவு அனைத்து இடங்களிலும் இயங்கமுடியும், அது இரகசியமாக இருக்கவேண்டிய அமைப்பு. எனவே நகரப் பகுதியில் அதற்கு காணி வழங்குவது பொருத்தமானதாக இருக்காது என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இதன்போது தெரிவித்திருந்தார்.

(அ)

## 3,621 சங்குகளுடன் ஒருவர் கைதானார்

மன்னார், பெப். 17

சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட 3,621 சங்குகளுடன் மன்னார் - ஆண்டான் குளம் பிரதேசத்தில் வைத்து சந்தேநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் கண்டல்குளி பிரதேசத்தை சேர்ந்த 54 வயதுடைய நபராவார்.

கடற்படையினர் மற்றும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட 3,621 சங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் - அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(அ)

## நாவலர் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், பெப். 17

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணிக்கு மன்றத்தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் உடுவில். மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கணேசரத்தினம் ஆதித்தன், சிறப்பு விருந்தினராக அகில இலங்கை சைவப் புலவர் சங்க செயலாளர் செ. த. குமரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நாவலர் நினைவுரையையும் சைவப்புலவர் செ. த. குமரன் ஆற்றவுள்ளார். அத்துடன், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளன. (ஐ)

## நுகர்வோர் நம்பிக்கை தொடர்ந்தும் வீழ்ச்சி!

### வெளிப்படுத்தியது கருத்துக்கணிப்பு

கொழும்பு, பெப். 17

இலங்கையில் நுகர்வோரின் நம்பிக்கை தொடர்ந்தும் வீழ்ச்சியடைவது கருத்துக்கணிப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தினை இலங்கை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த பின்னர் 2024 ஜனவரி மாதத்திலேயே நுகர்வோரின் நம்பிக்கையில் பெரும் வீழ்ச்சிகாணப்படுவதை இந்த கருத்துக்கணிப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இன்ஸ்ரிரியுட் ஒவ் ஹெல்த் முன்னெடுத்த கருத்துக்கணிப்பின்மூலம் இது தெரியவந்துள்ளது.

நுகர்வோர் உணர்வுசுட்டி வீழ்ச்சியடைந்து காணப்பட்டது என இன்ஸ்டியூட்ஒவ் ஹெல்த் தெரிவித்துள்ளது. நுகர்வோரின் எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்புகளை மதிப்பிடும் நுகர்வோர் எதிர்பார்ப்பு சுட்டியும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போதைய நிலை குறித்த சுட்டியும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த மார்ச்மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி குறித்த தகவல் வெளியான பின்னர் மீட்சி கண்ட நுகர்வோரின் நம்பிக்கைகள் கடந்த ஒன்பது மாதங்களாக வீழ்ச்சியடைந்து வருகின்றன என தெரிவித்துள்ள ஐ. எச். பி. நிறுவனம் தற்போது நுகர்வோர் நம்பிக்கைகள் சர்வதேச நாணயநிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்படுவதற்கு முன்னர் இருந்த காலத்திற்கு திரும்பியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu
17.02.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர் அரசியலின் இழிநிலை

தமிழ் மக்களின் அரசியலில் தமிழ்த் தேசிய நிலையில் அடையாளப்படுத்தும் முதல் முயற்சியாகவே இலங்கை தமிழ் அரசு கட்சியை எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1949இல் உருவாக்கினார். இதன் அங்குரார்ப்பண கூட்டத்தின்போது - “நான் உங்களுக்கு ஓர் அடையாளத்தை உருவாக்கித் தருவேன்”, என்றார் செல்வநாயகம் - ஆனால், அவ்வாறானதொரு கட்சி, அதன் உள்ளக பிரச்னையைத் தீர்க்க முடியாமல் நீதிமன்றம் சென்றிருக்கின்றது. இந்த நிலை நீடித்தால், நிச்சயம் இந்தக் கட்சியை காப்பாற்றித் தருமாறு ஓர் அணியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சென்றாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை - ஏனெனில், அந்தளவுக்கு சுயநல அரசியல் தமிழ் அரசு கட்சிக்குள் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது.

தமிழ் அரசு கட்சி ஒப்பீட்டடிப்படையில், மக்கள் மத்தியில் அதிக ஆதரவைப் பெற்றிருக்கும் ஒரு கட்சியென்னும் தோற்றம் இருந்தாலும்கூட, 2001இலிருந்து தமிழ் அரசு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரில்தான் மக்கள் மத்தியில் இயங்கி வந்திருக்கின்றது. இந்த நிலையில் தமிழ் அரசு கட்சியின் உண்மையான செல்வாக்கு என்னவென்பது அந்தக் கட்சி தனித்துத் தேர்தலில் போட்டியிட்டால் மட்டுமே தெரியவரும்.

சிறீதரன் தலைவருக்கான வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 2009இற்கு முன்னரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கப் போவதாக அறிவித்திருந்தார் - ஆனால், அவரின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கட்சி இல்லை - இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அவராலும் அவரின் ஆதரவாளர்களாலும் பேசப்பட்ட தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் சிறீலங்காவின் நீதிமன்றத்துக்குள் இருக்கின்றது.

தமிழ் அரசு கட்சியின் நிலைமை இவ்வாறென்றால் - மறுபுறம், குத்துவிளக்கு சின்னத்தில் தங்களை அடையாளப்படுத்தியிருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்கள் என்போர் அரசியலில் இருக்கின்றனரா என்னும் கேள்வியுடன்தான் அந்தக் கூட்டணியின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அவர்களை வெளியில் கொண்டுவருவதற்கு ஏதாவதொரு சிவில் சமூக அமைப்பு கூட்டம் நடத்த வேண்டியிருக்கின்றது. சைக்கிள் சின்னத்தின்கீழ் இயங்கிவரும் கட்சியினர் வழமைபோல் தங்களின் கற்பனை தேசியத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

இலங்கைத் தீவின் அரசியல் ஒரு தீர்க்கமான கட்டத்துக்குள் செல்லவுள்ளது. இதுவரையில் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் தெளிவற்ற எதிர்காலத்தை கொண்டிருந்த ஜே. வி. பி. முன்னரங்குக்கு வந்திருக்கின்றது. இதேபோன்று ரணில் விக்கிரமசிங்க தன்னை தகுதி உள்ளவராகக் காண்பித்துக் கொண்டாலும் அவர் தன்னை பொது வேட்பாளராக நிலைநிறுத்துவதில் வெற்றிபெற வேண்டியிருக்கின்றது. இன்னொருபுறம் சஜித் பிரேமதாஸ தான்தான் அடுத்த ஜனாதிபதி என்னும் கணிப்பில் மிதந்து கொண்டிருக்கின்றார். ரணிலும் சஜித்தும் ஓரணியில் நிற்கும் நிலையை ஏற்படுத்தும் முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று கூறப்பட்டாலும் அதன் சாத்தியம் தெளிவில்லாமலேயே இருக்கின்றது. இந்த நிலையில், தமிழ் மக்களின் தலைமைகள் என்போர் எதுவிதமான திட்டமும் இல்லாமல் எடுப்பார் கைப்பிள்ளை என்னும் தோற்றத்திலேயே இருக்கின்றனர். எவராவது கூறினால் அதன் பின்னால் செல்லும் ஒரு புத்தியில்லாத கூட்டமாகவே தமிழ் மக்கள் பார்க்கப்படுகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த் தேசிய அரசியலை நோக்கினால் அதன் நிலைமையோ இழிநிலையில் காட்சியளிக்கின்றது. இந்த நிலைமையை எவ்வாறு மாற்றியமைப்பது? ஒரு புதிய தலைமுறை தமிழர் அரசியலை கைப்பற்றுவதற்கான வாய்ப்பு உண்டா?

# நாவாந்துறை உணவகத்துக்கு 72 ஆயிரம் ரூபாய் அபராதம்!

யாழ்ப்பாணம், பெப். 17

சுகாதாரமற்ற முறையில் நாவாந்துறையில் இயங்கிய உணவகம் ஒன்றுக்கு 72 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்.

நாவாந்துறையில் அந்தப் பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் எஸ். உதயபாலா தலைமையிலான குழுவினர் கடந்த டிசெம்பர் மாதம் சோதனை நடத்தினர். அப்போது, உணவகம் ஒன்றில் பழுதடைந்த இறைச்சியை உணவில் சேர்த்து வழங்கியமை கண்டறியப்பட்டது.

இதைத் தொடர்ந்து உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் 10 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டது.

நேற்றைய தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து அவருக்கு 72 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், உணவகத்தை சீர்செய்யும்வரை அதனை மூடவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

*எல்லை தாண்டிய மீன்பிடி:*

# 3 இந்திய மீனவர்களுக்கு சிறை 20 பேர் நிபந்தனையில் விடுதலை!

யாழ்ப்பாணம், பெப். 17

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் மூவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதே நேரம் 20 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்துள்ளது ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றம்.

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த 3ஆம் திகதி இரவு கைதான இந்திய மீனவர்கள் 23பேர் கைதாகினர். இந்த மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, 20 பேருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை என்ற நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

இரண்டு படகுகளின் ஓட்டுநர்களுக்கும் ஆறுமாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டதுடன், 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

அத்துடன், ஒரு மீனவர் இரண்டாவது தடவையும் எல்லை தாண்டி வந்ததால் அவருக்கு ஒரு வருட கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் சட்டரீதியான நடவடிக்கைகளை நிறைவுற்ற பின்னர் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (ஐ)

# மத்தியஸ்த சபை முறைமை ஏனைய மாகாணங்களுக்கும்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, பெப். 17

வடக்கு, கிழக்கைப் போன்றே ஏனைய மாவட்டங்களில் நிலவும் காணிப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு மத்தியஸ்த சபை முறை ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மத்தியஸ்த சபை முறைமையில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பின் ஊடாக தற்போது வழக்குகளைத் தீர்க்கும் வீதம் 70 சத வீதத்தால் அதிகரித்துள்ளது.


மேலும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான வழக்கு விசாரணைகளை தீர்ப்பதற்காக மத்தியஸ்த சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரம் தற்போது 10 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகளவு காணிப் பிரச்னைகள் உள்ளன.



இந்த இரண்டு மாகாணங்களுக்கும் தனித்தனியான காணி மத்தியஸ்த சபை முறையை அறிமுகப்படுத்தியுள்ளோம். அது மிகவும் வெற்றிகரமான முறையில் செயல்படுத்தப்பட்டது. இதனால் மேலும் 16 மாவட்டங்களுக்கு இந்த காணி மத்தியஸ்த சபை முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளோம் - என்றார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பெப்ரவரி - 17 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 05
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : நவமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். விட்டுகொடுத்து போக வேண்டிய நாள்.

**இடபம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றி கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**கடகம்**
மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். திடீர் சந்திப்புகள் நிகழும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சாதித்துக் காட்டும் நாள்.

**சிம்மம்**
உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். அமைதி நிலவும். எதிர்பாராத நன்மைகள் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**தனுசு**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம் -பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மனநிறைவு பெறும் நாள்.

**மகரம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் புது அனுபவம் உண்டாகும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் விலகும்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வேலைச்சுமை அதிகரிக்கும்.உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

*திருச்சி சிறப்பு முகாமில் உள்ள*

# முருகன் உள்ளிட்ட நால்வரையும் விடுதலை செய்ய நடவடிக்கை

திருச்சி, பெப். 17

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களான சாந்தன், முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ் ஆகியோரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று கைதிகளாக இருந்த பேரறிவாளன், முருகன், சாந்தன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் உள்பட 7 பேரை விடுதலை செய்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இவர்களில் இலங்கையை சேர்ந்த சாந்தன், முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 4 பேரும் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் தங்களை முகாமில் இருந்து விடுதலை செய்யக் கோரி தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இதில் சாந்தன் தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, சாந்தனை இலங்கைக்கு அனுப்ப விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய - மாநில அரசுகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே முருகனும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், லண்டனில் வசிக்கும் தனது மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும் அதற்காக கடவுச்சீட்டு பெற திருச்சி சிறப்பு முகாமில் இருந்து சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகம் அழைத்துச் செல்ல உத்தரவிடக் கோரி இருந்தார்.

அப்போது மத்திய அரசு தரப்பில், முருகனை லண்டனுக்கு அனுப்ப முடியாது எனவும் இலங்கை துணை தூதரகம் ஆவணங்களை வழங்கினால் மட்டுமே இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து பயண ஆவணம் வழங்குவதற்கான நேர்காணலுக்கு முருகனை இலங்கை துணை தூதரகம் அழைக்கும்போது அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க நீதிபதி உத்தரவிட்டார்.

இதன் அடிப்படையில் இன்னும் ஓரிரு தினங்களில் முருகன் திருச்சி சிறப்பு முகாமில் இருந்து பலத்த பாதுகாப்புடன் இலங்கை துணை தூதரகம் அழைத்து செல்லப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல் முகாமில் உள்ள றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 2 பேரையும் விடுவிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருவதாக சிறப்பு முகாம் வட்டார தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

# சுயநலத்துக்காக பழனிசாமி தி. மு. கவிடம் சரணாகதி!

## பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு

சென்னை, பெப். 17

ஒரே நாடு ஒரே தேர்தல் விவகாரத்தில் இரட்டை நிலைப்பாடு எடுத்து தனது சுயநலத்துக்காக எடப்பாடி பழனிசாமி தி. மு. கவிடம் சரணாகதி அடைந்துவிட்டார் என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறை கொள்கையை அ. தி. மு. க. ஆதரிக்கிறது என்றும், ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறை கூட்டாட்சி அமைப்பை வலுப்படுத்தும் எனவும் கூறியவர் பழனிசாமி. இவர் தற்போது, அந்தர் பல்டி அடித்திருக்கிறார்.

ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு எதிரான தீர்மானம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இதிலிருந்து, தி. மு. கவுடன் கைகோத்துவிட்டார் எடப்பாடி பழனிசாமி என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது. எந்த தி. மு. க. என்கிற தீயசக்தியை எதிர்த்து எம். ஜி. ஆர். கட்சியை தொடங்கினாரோ, எந்தத் தீய சக்தியை எதிர்த்து ஜெயலலிதா கட்சியை வளர்த்தாரோ, அதையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு, தி. மு. கவுடன் கைகோத்திருப்பது, ரகசிய உடன்பாடு செய்திருப்பது என்பது வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதற்கு அடையாளம்.

சுயநலத்துக்காக தி. மு. கவிடம் சரணாகதி அடைந்துவிட்டார். கட்சியின் தனித் தன்மை தாரைவார்க்கப்பட்டு விட்டது. வருகின்ற மக்களவைத் தேர்தலில் துரோகக் கூட்டம் நான்காவது இடத்துக்கு மக்களால் துரத்தி அடிக்கப்படும் - என்றுள்ளது. (ஐ)

# பா. ஜ. கவுக்கு வாய்ப்பளித்தால் உலகத்தரம் வாய்ந்த சென்னை!

## அண்ணாமலை சொல்கிறார்



சென்னை, பெப். 17

பா. ஜ. கவுக்கு வாய்ப்பு கொடுத்தால் உலகத்தரம் வாய்ந்த சென்னையை உருவாக்குவோம் என்று அந்தக் கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

என் மண் என் மக்கள் நடைபயணத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2024 மக்களவை தேர்தலில் வெற்றி பெற்று 3ஆவது முறையாக பா. ஜ. க. ஆட்சி அமைக்க வேண்டும் என்று சாமானிய மக்கள் நினைக்கிறார்கள். ஒரு சாமானிய மனிதர் நினைத்தால்தான் அரசியல் சுத்தமாகும்.

ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் பெய்யும் மழையின் போது கொளத்தூர் மக்கள் 8 நாட்கள் தண்ணீருக்கு உள்ளேயே இருக்கிறார்கள். மழை பெய்தால் வாரக் கணக்கில் தண்ணீர் தேங்குகிறது. குண்டும் குழியுமான சாலைகளாக இருக்கிறது. குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் சென்னையில் போதுமானதாக இல்லை.

மோடியை போன்ற சாமானிய மனிதர் ஆட்சிக்கு வரும் போது, இந்தியாவும் வளரும், ஒவ்வொரு மாநிலமும் வளரும். 10 ஆண்டுஆட்சியில் ஒரு குண்டூசியை திருடிவிட்டார் என்ற குற்றச்சாட்டைக்கூட மோடி அரசுமீது வைக்க முடியாது.

பா. ஜ. கவுக்கு வாய்ப்பு கொடுத்துப் பாருங்கள். உலகத்தரம் வாய்ந்த சென்னை மாநகரை உருவாக்க வேண்டும் என்றால் மோடியின் கையில் சென்னையை ஒப்படைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# மலையக மக்களுக்காகவும் உரத்து குரல் கொடுப்பேன்!

## ஜீவனிடம் சிறிதரன் உறுதி

கொழும்பு, பெப். 17

**இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறிதரனை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மரியாதை நிமித்தம் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிதரனின் இல்லத்தில் இக்கலந்துரையாடல் நேற்று காலை இடம்பெற்றது.இதன்போது இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவராக தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனுக்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்துகளை தெரிவித்து கொண்டார்.

இதன்போது நீர் வழங்கல் தொடர்பில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.



அதேவேளை, மலையக தமிழர்களின் அரசியல், பொருளாதார ,சமூக விடுதலைக்காக தான் தொடர்ந்து குரல் கொடுப்பதாகவும், தமது கட்சியின் ஆதரவு என்றும் இருக்கும் எனவும் சிறிதரன் உறுதியளித்துள்ளார். (அ)

# பல்பொருள் விற்பனை நிலையத்தில் தேயிலை திருடிய பொலிஸார் கைது!

கொழும்பு, பெப். 17

வெரஹெர பிரதேசத்தில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையமொன்றில் இருந்து இரு தேயிலை பொதிகளை திருடியதாக கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொரலஸ்கமுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மோதரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தராவார்.

இவர் தனது காலாவதியான மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உரிமத்தை புதுப்பித்தல் தொடர்பில் கடந்த 14ஆம் திகதி அன்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வெரஹெர அலுவலகத்திற்கு சென்றுள்ளார்.

தனது காலாவதியான மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உரிமத்தை புதுப்பித்துக்கொண்ட இவர் இந்த அலுவலகத்திற்கு அருகில் இருந்த பல்பொருள் விற்பனை நிலையமொன்றிற்குள் சென்றுள்ளார்.

இவர் இந்த பல்பொருள் விற்பனை நிலையத்தில் இருந்து இரு தேயிலை பொதிகளை திருடியுள்ளார். இதனை அறிந்துகொண்ட இந்த பல்பொருள் விற்பனை நிலையத்தின் ஊழியர்கள் பொலிஸ் சீருடையில் இருந்த இவரை சுற்றிவளைத்து பிடித்து பொரலஸ்கமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர் திருடியதாக கூறப்படும் இரு தேயிலை பொதிகளின் பெறுமதியானது 2,240 ரூபாவாகும்.

கைது செய்யப்பட்டவர் நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கு மார்ச் 15 வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, பெப். 17

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நேற்று முன் தினம் முதல் மார்ச் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதி பெறும் அனைவருக்கும் எவ்வித தடங்கலும் இன்றி அஸ்வெசும பலன்கள் கிடைக்குமெனவும் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும முதற்கட்டத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத குடும்பங்களுக்கும் விண்ணப்பங்களை சமர்ப்பித்தும் வீட்டுத் தகவல் கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படாத எந்தவொரு நபர்களும் இரண்டாம் கட்டத்திற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும இரண்டாம் கட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன இந்த விடயங்களை தெரிவித்தார். (அ)

# சடுதியாக அதிகரித்தது பெரிய வெங்காய விலை!

கொழும்பு, பெப். 17

சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வாரத்தில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 330 ரூபாயாக இருந்த நிலையில், ஒரு கிலோ பெரிய வெங்காயம் தற்போது 400 ரூபாயை நெருங்கியுள்ளது.

அத்துடன் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையங்களில் 420 ரூபாயாக பதிவாகியுள்ளது.

# 11 புராதன தலங்கள் புனித பூமியாக அறிவிப்பு

கொழும்பு, பெப். 17

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் அரச வர்த்தமானியின் ஊடாக தொல்லியல் சிறப்புமிக்க 11 வழிப்பாட்டுத் தலங்கள் புனித பூமியாக பெயரிடப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகளை புனித பூமியாக பெயரிடுவதற்கான சன்னஸ் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அதற்கமைய அனுராதபுரம் ஹொரவ்பொத்தான பிரதேச செயலக பிரிவின் அம்பகஸ்வெவ புராதன விகாரை, புத்தளம் தங்கொட்டுவ பிரதேச செயலக பிரிவின் பொதுவடன புராதன விகாரை, அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முஹுது மகா விகாரை, கம்பஹா மாவட்டத்தின் தொம்பே பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான மெத்தேகம விகாரை, ஹம்பாந்தோட்டை உத்தகந்தர விகாரை, திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகத்தின் ஸ்ரீ சத்தர்ம யுக்திக ஆசிரமம், குருணாகல் நாரம்மல பிரதேச செயலகத்தின் தம்பதெனிய விஜய சுந்தராராம விகாரை, குச்சவெளி பிரதேச செயலகத்தின் சாந்தி விகாரை, குருணாகல் குளியாபிட்டிய மேற்கு பிரதேச செயலகத்தின் ஸ்ரீ சுதர்மாராம புராதன விகாரை, கம்பஹா சித்த கபலே மல் சூனியம் தேவாலய, குச்சவெளி பிரதேச செயலகத்தின் யான் ஓயா விகாரை, சாகர புர சுமுதுகிரி வன ஆசிரமம் உள்ளிட்ட தலங்களே புனித பூமிகளாக பெயரிடப்பட்டிருக்கின்றன.

அதற்கமைய தற்போது வரையில் நாட்டின் 142 வழிபாட்டுத் தலங்கள் புனித பூமிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்போது புத்த சாசனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசிலமைப்புக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுவாரென ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் அரசாங்கம் புத்த சாசனத்தின் மேம்பாட்டிற்காக முன்னெடுத்துவரும் முயற்சிகள் குறித்து வெளிவூட்டிய ஜனாதிபதியின் செயலாளர், தேரவாத பௌத்த மத்தியஸ்தானமான மகா விகாரையின் ஆய்வுப் பணிகளை ஆரம்பிக்கவும், மகா விகாரை பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கவும், கண்டி சர்வதேச பௌத்த அருங்காட்சியகத்தை நிர்மாணிப்பதற்கு அவசியமான திட்டங்களை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

வித்யோதய பிரிவெனாதிபதியும் காலி பிரதான சங்கநாயக்கருமான வண. பலாங்கொட சோபித தேரர், ஸ்ரீ லங்கா அமரபுர மஹா பீடத்தின் மகா நாயக்க தேரர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளருமான கந்துனே அஸ்ஸஜி மகா நாயக்க தேரர், ராமக்ஞ மஹா பீடத்தின் மேல் மாகாணத்துக்கான பிரதான சங்க நாயக்கர் பேராசிரியர் வண. மெதகம நந்தவங்ச நாயக்க தேரர் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (அ)

# இலங்கை மக்களுக்கு நாங்கள் செய்த உதவிகள் சமுதாய நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டவை

## மன்னாரில் கூறினார் இந்தியத் தூதுவர்

மன்னார், பெப். 17

இலங்கை மக்களுக்கு நாங்கள் செய்த உதவிகள் சமுதாய நோக்கத்து டன் முன்னெடுக்கப்பட்டவை. இதே போன்றே மீனவ சமூகம் முக்கியத்துவம் பெறுகின்றது என இலங்கைக்கான இந்திய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் 'இந்தியாவிலிருந்து அன்புடனும் அக்கறையுடனும்' எனும் தொனிப் பொருளில் மன்னார் மாவட்ட மீனவ சமாசங்களுக்கு குளிர் சாதனப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, அவரது துணைவியார் மற்றும் யாழ்ப் பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது தெரிவு செய்யப்பட்ட மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய 4 மீனவ சமாசங்களுக்கு குளிர்சாதன பெட்டிகள் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் - மன்னார் மாவட்டத்தின் எனது முதல் விஜயமாக இது அமைந்துள்ளது.இங்கு என்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, என்ன தேவைகள் உள்ளன என்பதை அறிந்துள்ளேன். 2010 இல் இருந்து இங்கு அமுல்படுத்தி உள்ள பல்வேறு திட்டங்களையும் என்னால் நினைவு கூர முடிகிறது.

இலங்கை மக்களுக்கு நாங்கள் எவ்வாறு உதவி செய்துள்ளோம், அவை சமுதாய நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டவை, அதே போன்றே மீனவ சமூகமும் முக்கியத்துவம் பெறுகின்றது. மன்னாரிற்கு அதிகம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றமையைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக இந்தியாவில் இருந்து வருகை தரும் மக்களினால் இங்கு ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளைப் பார்க்க முடிகிறது.

அரச அதிபர் கூறியது போல் தலை மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை ஆராய்ந்து வருகிறோம். அதற்கு தேவையான விடயங்களை அங்கு முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக மீனவ சமூகத்திற்கு தேவையான உள்கட்டமைப்பு. தொழில்நுட்ப மற்றும் இந்தியாவில் இருந்து கொண்டு வர வேண்டியவை தொடர்பாகவும் ஆராய்ந்து வருகிறோம்.

சில மாதங்களுக்கு முன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தொழில்நுட்பக் குழு ஒன்று வருகை தந்திருந்தது. இங்கு இறால் மற்றும் நண்டு வளர்ப்பு தொடர்பான தொழில் நுட்ப ரீதியான உட்கட்டமைப்பு என்பவை தொடர்பாகவும் வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. அதே போன்று வேறு பல வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். - என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# தேர்தல்கள் ஆணைக்குழுவினர் அமைதி காப்பது அதிருப்தியானது

## டலஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 17

**ஜனாதிபதி தேர்தல் குறித்து ஜனாதிபதி அலுவலகம் அறிக்கை வெளியிட வேண்டிய தேவை கிடையாது. அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்தில் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதி தேர்தல் விவகாரம் பேசுபொருளாகியுள்ள நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு அமைதியாக இருப்பது அதிருப்திக்குரியது என சுதந்திர மக்கள் சபையின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**



கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவி காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 19ஆம் திகதியுடன் நிறைவடையும். ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு ஒரு மாத காலத்துக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். புதிய ஜனாதிபதி ஒக்டோபர் மாதம் பதவி பிரமாணம் செய்ய வேண்டும். ஜனாதிபதி தேர்தல் குறித்து நாட்டின் அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியமைப்பின் ஊடாக நெருக்கடிகளை ஏற்படுத்துவதில் திறமையானவர். மாகாண சபைகள் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பனவற்றை இல்லாதொழித்ததை போன்று ஜனாதிபதி தேர்தலை நெருக்கடிக்குள்ளாக்க முடியாது.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிர்வரும் மாதங்களில் பொறுப்பாக்கப்படும். அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதி தேர்தலை எப்போது நடத்த வேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

ஜனாதிபதி தேர்தல் குறித்து ஜனாதிபதி அலுவலகம் அறிக்கை வெளியிடவேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதி தேர்தலை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ரத்து செய்யும் விடயம் தற்போது பேசுபொருளாக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது தொடர்பில் 1994ஆம் ஆண்டு முதல் பேசப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ,மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் நிறைவேற்று அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தவில்லை. இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தி, ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளார். ஆகவே நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதாக தற்போது குறிப்பிடப்படுவதில் எவ்வித உண்மை தன்மையும் கிடையாது -என்றார். (அ)

# இஸ்ரேல் அமைச்சரை சந்தித்தார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இஸ்ரேலின் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு அமைச்சர் பிரிகேடியர் ஜெனரல் மிரி ரெகேவ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஹமாஸ் போராளிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேலியர்களை மீட்பதற்கு இலங்கை தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கும் என்றும் காஸா பகுதியில் இடம்பெறும் மோதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பலஸ்தீன அரசை அமைப்பதற்கு இலங்கை ஆதரவளிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொழம்பகே ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

# பஸ் தரப்பினருக்கு இடையில் மோதல் கைது செய்யப்பட்ட 9 பேரும் மறியலில்!

கொழும்பு, பெப். 17

மஸ்கெலிய பகுதியில், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான மற்றும் தனியார் பேருந்துகளின் தரப்பினருக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 9 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டன் நீதவான் நீதிமன்றினால் நேற்று முன் தினம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிவனொளிப்பாதமலைக்கு சென்று இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தில் திரும்பிய 7 பேருக்கும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோருக்கும் எதிராகவே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் நோக்கி பயணிக்கும் போது, மஸ்கெலியா எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் பயணிகளை ஏற்றுவதற்கு முற்பட்ட போது, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான மற்றும் தனியார் பேருந்துகளின் தரப்பினருக்கு இடையில் மோதல் ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்குள் மதுபோதையில் புகுந்த சிலர் அட்டகாசம்!

யாழ்ப்பாணம், பெப். 17

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் உட்புகுந்த இனம் தெரியாத சிலர் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலைக்கு நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை மது போதையில் வந்த சிலர் கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரைப் தலையில் பலமாகத் தாக்கினர்.

பாதுகாப்பு உத்தியோகத்தரின் அலுவலக ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். இதனை தடுக்க வந்தவர்களையும் தகாத வார்த்தைகளால் கடுமையாக மிரட்டினர்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிசாருக்கு வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்ட நிலையில்,பொலிசார் வாக்குமூலங்களைப் பதிவு செய்து, விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)



# தனியார் நிறுவனத்தில் 4.5 மில்லியன் ரூபாவை மோசடி செய்த 19 வயது பெண் காசாளர் கைது!

கொழும்பு, பெப். 17

தனியார் நிறுவனமொன்றில் பணி புரியும்போது 4.5 மில்லியன் ரூபாவை மோசடி செய்தார் எனக் கூறப்படும் 19 வயது பெண் காசாளர் ஒருவர் களுத்துறை விசேட மோசடி விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயாகல, ஹல்கந்தவில, துவகொட பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருவளை, அம்பேபிட்டிய கம பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவன உரிமையாளர் ஒருவர் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2023.06.09 முதல் 2024.02.06 வரை இந்த மோசடி இடம்பெற்றுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (அ)

# உயர்நீதிமன்றில் முதியவரிடம் மண்டியிட்டு மன்னிப்பு கோரிய 3 பொலிஸ் அலுவலர்கள்!

கொழும்பு, பெப். 17

3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட பிரஜை ஒருவர் முன் மண்டியிட்டு மன்னிப்பு கேட்ட சம்பவமொன்று உயர் நீதிமன்றில் இடம்பெற்றுள்ளது.

கொட்வின் பெரேரா என்ற 88 வயதான சிரேஷ்ட பிரஜை ஒருவரிடமே இவ்வாறு மன்னிப்பு கோரப்பட்டுள்ளது.

அதேபோன்று, நீதிபதிகள் விஜித் கே மலல்கொட, அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக மனுதாரருக்கும் பிரதிவாதிகளான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டின் பிரகாரம் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் மன்னிப்பு கோரியுள்ளனர்.

2017 ஆம் ஆண்டு, கொட்வின் பெரேரா கொழும்பில் உள்ள அசிரி தனியார் மருத்துவமனைக்குச் சென்று கொண்டிருந்தபோது, வீதியொன்றுக்கு அருகில் விபத்துக்குள்ளான ஒரு தொழிலாளி ஒருவர் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்து, பின்னர் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அப்போது அவருக்கு 81 வயது.

அதன் பின்னர் கொட்வின் பெரேராவை பிரதிவாதிகளான பொலிஸ் உத்தியோகத்தர்கள் அழைத்துச் சென்று பொலிஸ் நிலைய கூண்டில் அடைத்ததாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தை இப்படித்தான் நடைமுறைப்படுத்துவீர்களா என்று கேட்டதற்கு பொலிசார் எதிர்மறையான பதிலையே அளித்ததாக அவர் தனது முறைப்பாட்டில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டமைக்கு எதிராக மன வேதனை அடைந்த கொட்வின் பெரேரா, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

எவ்வாறாயினும், மனுதாரர் கொட்வின் பெரேரா பிரதிவாதிகளுடன் சமரசம் செய்து கொள்வதற்கு இணங்கியதையடுத்து, அந்த சமரசம் குறித்து விசாரிப்பதற்காக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நேற்று முன் தினம் அழைக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது, மனுதாரர் பெரேரா நீதிமன்றத்தில் ஆஜரானார்.

மேலும், நாரஹேன்பிட்டி பொலிஸ் பிரிவின் இரண்டு கான்ஸ்டபிள்கள் மற்றும் சார்ஜன்ட் ஆகியோரின் பெயர்களை அழைத்த பின்னர், அவர்கள் மூவரும் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் விஷேட சந்தர்ப்பங்களில் அணியும் 01 ஆம் இலக்க சீருடை அணிந்து உத்தியோகபூர்வ பதக்கங்கள் மற்றும் அணிகலன்களை அணிந்து நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

பிரதிவாதிகளுடன் சமரசம் செய்ய ஒப்புக்கொள்கிறீர்களா என்று மனுதாரரிடம் நீதிமன்றம் கேட்டதுடன் அவர் தனது உடன்பாட்டைத் தெரிவித்தார்.

பதிலளித்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களிடமும் உரையாற்றிய நீதிபதி விஜித் கே மலல்கொட, எதிர்காலத்தில் இவ்வாறான தவறான செயல்களைச் செய்யக்கூடாது என கடுமையாக எச்சரித்துள்ளார்.

நாட்டின் மூத்த குடிமகன் ஒருவருக்கு சுதந்திரமாக செயல்பட உரிமை உள்ளது என்பது தெரியாதா என்று கேட்ட நீதிபதி, மூத்த குடிமகன் ஒருவரை இப்படியா நடத்துவது என்று கேள்வி எழுப்பினார்.

வழக்கை முடித்துக் கொள்ள மனுதாரர் சம்மதித்துள்ளதால், வழக்கை முடித்துக் கொள்வதாக தெரிவித்த நீதிமன்றம், இல்லாவிட்டால் மனுதாரரின் வயதைக் கருத்தில் கொண்டு, பொலிசார் பெரும் இழப்பீடு வழங்க வேண்டியிருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இது போன்ற செயல்களை மீண்டும் செய்ய வேண்டாம் என மூன்று பொலிஸாருக்கும் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்பின், மூன்று பொலிஸாரும் தனித்தனியாக மனுதாரர் பெரேரா முன் சென்று மண்டியிட்டு மன்னிப்பு கேட்டனர்.

# பொருளாதார வீழ்ச்சிக்கு மத்திய வங்கியே காரணம்

## நீதி அமைச்சர் விஜேதாச குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 17

**நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைய மத்திய வங்கியே பிரதான காரணமாகும். அஜித் நிவாட் கப்ரால் அளுநராக இருந்த காலத்தில் இருந்து நாட்டின் அன்னிய செலாவணி துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்தது. அதனால் வெளிநாட்டுகளில் இருப்பவர்களுக்கு மத்திய வங்கியின் நடவடிக்கைகளில் நம்பிக்கை இல்லாமல் போனது என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச வங்கிகள் சாதாரண மக்கள் தொடர்பில் கண்டுகொள்வதில்லை. அதனால்தான் அந்மக்கள் கறுப்பு வியாபாரிகளை நாடி, தங்களின் வியாபார நடவடிக்கைகளுக்கு பாரிய வட்டித் தொகைக்கு கடன் பெறுகின்றனர். இதனால் சாராதண வியாபாரிகள் விவசாயிகள் தங்களின் தொழிலில் நட்டம் ஏற்படும்போது அவர்கள் அந்த தொழிலை விட்டுவிடும் நிலைக்கு செல்கிறனர். அதனால்தான் இன்று நாட்டில் விவசாயம் செய்பவர்களின் வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதனால் இது தொடர்பாக மத்திய வங்கி கொள்கை ரீதியில் இது தொடர்பாக தீர்மானம் மேற்கொண்டு அதனை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் அது தொடர்பான சட்டங்களை அனுமதித்துக்கொள்ள எமக்கு நடவடிக்கை எடுக்க முடியும். மத்திய வங்கிக்கு நிதி தொடர்பான அதிகாரங்களை வழங்கும் புதிய சட்டங்கள்



கொண்டுவரப்பட வேண்டும். அதனால் இன்னும் தாமதிக்காமல் மத்திய வங்கி இதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் நாடு வீழ்ச்சியடைய பிரதான காரணம் மத்திய வங்கியாகும். இதற்கு 90 வீதம் மத்திய வங்கியின் நடவடிக்கையே காரணமாகும். 10 வீதம் மற்ற விடயங்களாகும். 2006இல் மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டது முதல் எமது வெளிநாட்டு செலாவணி முற்றாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்தது. அதனால் வெளிநாடுகளில் இருக்கும் எமது தொழிலாளர்கள் பாரியளவில் வெளிநாடுகளில் வியாபாரம் செய்து, அங்கு சேமித்து வைத்துக்கொண்டடார்கள். நாட்டுக்கு பணம் அனுப்பவில்லை.

அதனால் எந்தவொரு நாட்டும் வெளிநாட்டு செலாவணியை நிர்வகித்துக்கொள்ள தவறினால் அந்த நாடு தோலியடையும். அதுதான் எமக்கும் ஏற்பட்டது. எமது அவெளிநாட்டு செலாவனியை முகாமைத்துவம் செய்ய மத்திய வங்கிக்கு முடியாமல் போனது. சிறிமா அம்மையாரின் காலத்தில் வெளிநாட்டு செலாவணி மோசடி ஆணைக்குழு அமைத்து விசாரணை மேற்கொண்டு, அதில் குற்றவாளியாக்கப்பட்ட அனைவரையும் சிறையிலடைத்தார். சிலர் சிறையிலேயே மரணித்தார்கள்.

அதனால் நாட்டின் நிதி முகாமைத்துவம் தொடர்பாக மத்திய வங்கி சுயாதீன நிறுவனமாக செயற்படும் வகையில் புதிய சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கு முன்னர் மத்திய வங்கி அதுதொடர்பான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முறையான நிதி முகாமைத்துவம் இல்லாமையே கறுப்பு சந்தை நிதி நிறுவனங்கள் அதிகரிக்க காரணமாகும்- என்றார். (அ)



# மடு தேவாலயம் சென்று வழிபட்ட இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா

மன்னார், பெப். 17

புதிதாக பொறுப்பேற்ற இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று முன்தினம் மன்னாரில் உள்ள மடு தேவாலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

அதனை தொடர்ந்து, இந்திய தூதுவர் மன்னார் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட மீனவ சமாசங்களுக்கு குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கும் நிகழ்விலும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஒட்சிசன் கொள்வனவுக்கு வழங்கிய நிதியில் தரமற்ற மருந்து கொள்வனவு

கொழும்பு, பெப். 17

ஒட்சிசன் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட நிதியை பயன்படுத்தி தரம்குறைந்த மருந்து கொள்வனவு செய்யப்பட்டமை தெரியவந்துள்ளது.

ஒட்சிசன் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட 14.5 மில்லியன் ரூபாயினை தரம் குறைந்த இம்யுனோகுளோபுலின் ஊசியை கொள்வனவு செய்வதற்காக குறிப்பிட்ட விநியோகஸ்தரிடம் சுகாதார அமைச்சு வழங்கியுள்ளதாக பிரதிசொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம மாளிகாகந்த நீதவான் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சராக பணியாற்றியவேளை 8ஆவது சந்தேகநபர் மருந்து தட்டுப்பாடு காரணமாக நாட்டில் சுகாதாரதுறை வீழ்ச்சியடையும் என தெரிவித்து அவசர அவசரமாக மருந்துகளை கொண்டு வருவதற்காக சில கட்டுப்பாடுகளை ஏன் தளர்த்தினார் என்பது குறித்து விசாரணைகளை சிஐடியினர் முன்னெடுத்துள்ளனர் எனவும் பிரதிசொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்களுடன் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் கையெழுத்துக்கள் பொருந்துகின்றனவா என ஆராயுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(அ)

# இலங்கை - இந்திய அரசுகளின் அதிகாரிகள் கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 17

இந்திய அரசின் நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறையின் செயலாளர் வி.ஸ்ரீனிவாஸ் மற்றும் இலங்கைப் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோர் தலைமையில் நிர்வாக மற்றும் அரச அதிகாரிகள் இடையிலான ஒத்துழைப்பு குறித்த இருதரப்பு பிரதிநிதிகள் மட்ட பேச்சுவார்த்தை நேற்று முன் தினம் புது டில்லியில் நடைபெற்றது.

இலங்கையைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவில் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் கலாநிதி தர்மஸ்ரீ குமாரதுங்க, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக பணிப்பாளர் நாயகம் நாலக களுவெவே ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.

இதேவேளை, இந்திய அரசின் நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறையின் மூத்த அதிகாரிகள், என்பிஎஸ் ராஜ்புத், புனித் யாதவ் மற்றும் திருமதி. ஜெயா துபே ஆகியோரும் இப்பேச்சுகளில் கலந்து கொண்டனர்.

இலங்கையின் சிரேஷ்ட மற்றும் நடுத்தர மட்டங்களைச் சேர்ந்த அரச ஊழியர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நல்லாட்சிக்கான தேசிய மையம் மூலம் நடத்தும் நோக்குடன், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் மற்றும் இடையில் முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வழிமுறைகள் குறித்து இச்சந்திப்புகளின்போது இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர், அடுத்த ஐந்தாண்டுகளில் இலங்கை அதிகாரிகளுக்கான திறன்விருத்தி செயற் திட்டம் மற்றும் பயிற்சி திட்டங்களை மேம்படுத்தல் மற்றும் ஒத்துழைப்பு,பல்வேறு உயர் மட்டங்களில் 1000 அதிகாரிகளுக்குப் கலப்பு முறையில் பயிற்சிகளை நடாத்துவதற்கும் செயற்திட்டங்களை முன்வைத்தார். (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பொலிஸ் காவல் அரண் திறந்து வைப்பு

கொழும்பு, பெப். 17

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு அருகில் புதிய பொலிஸ் காவல் அரண் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரைக்கு அமைய பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கூறுகையில்,

நாட்டின் வைத்தியசாலை கட்டமைப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலை பாரிய இடம் வகிக்கிறது. நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களிலிருந்தும் நோயாளர்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்காக இங்கு வருகை தருகின்றனர். எனவே நாம் அவர்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும். மேலும் தேசிய வைத்தியசாலையின் அண்மித்த பகுதியில் விசேட போக்குவரத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



இதேவேளை பாதாளக்குழு உலகின் முக்கிய செயற்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். திட்டமிட்ட குற்ற செயல்கள் மற்றும் போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பில் விசாரணை நடத்தி அதனை எதிர்காலத்தில் முடிவுக்கு கொண்டு வர எதிர்பார்த்துள்ளோம்.

மேலும், நாட்டில் இருந்து தப்பிச் சென்று வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்ய சர்வதேச பொலிஸாருடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளோம். இவ்வாறான 42 குற்றவாளிகளுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களை கைது செய்ய சர்வதேச பொலிஸாருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்-என்றார்.(அ)

ஈழநாடு



# 5 மாதத்திற்குள் மக்கள் கோரிக்கையை நிறைவேற்றிய செந்தில் தொண்டமான்!

அம்பாறை, பெப். 17

**யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயில் பிரதேசத்தை சேர்ந்த மக்களுக்கு ஐந்து மாதக் காலத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டன.**



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தை சேர்ந்த மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, வீடுகள் இன்றி இன்னல்களுக்கு முகம் கொடுத்து வந்த நிலையில், இவ்விடயம் தொடர்பாக அம்பாறை மாவட்ட அரச அதிபர், திருக்கோவில் பிரதேச செயலாளர், அரச உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொது மக்களால் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

ஆளுநர் செந்தில் தொண்டமான் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு, மக்களின் குறைகளை கேட்டறிந்து மக்களின் கோரிக்கையை ஏற்று ஐந்து மாதக் காலத்திற்குள் அவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்து அம்மக்களிடம் கையளித்துள்ளார்.

திருக்கோயில் மாவட்ட மக்கள் தங்களது கோரிக்கையை குறுகிய காலத்தில் நிறைவேற்றியமைக்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் திருக்கோவில் பிரதேச செயலாளருக்கும் தங்களது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

# கிராமப் புறங்களில் வாழும் மக்களின் நலன் கருதி நடமாடும் கண்பரிசோதனை



திருமலை, பெப். 17

கிராமப்புறங்களில் வாழும் மக்களின் நலன் கருதி, கொழும்பு கண்பரிசோதனை நிலையத்தினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்பரிசோதனை நடமாடும் சேவை நேற்று திருகோணமலை கோபாலபுர முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

கொழும்பு கண்பரிசோதனை நிலையத்தின் கண்பரிசோதனை வைத்தியர் ஆர்.அருன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த நடமாடும் கண்பரிசோதனையில் கண் பார்வை குறைபாடு, குறும் பார்வை குறைந்தவர்கள், கண் நோய் சம்மந்தப்பட்டவர்கள், தலைவலி மற்றும் கண்ணில் நீர் வடிதல், கண்கூச்சம் போன்ற கண்நோய் உள்ளவர்கள் தங்களின் கண்களை சிறந்த முறையில் பரிசோதனை செய்து கொண்டதுடன் அவர்களுக்கான மூக்குக்கண்ணாடியையும் பெற்றுக் கொண்டனர்.

குறிப்பாக, பாடசாலை மாணவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு அவர்களுக்கான கண்பரிசோதனைகள் இடம்பெற்றதுடன் மூக்குக் கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்




மட்டக்களப்பு, பெப். 17

மட்டக்களப்பு வாழைச்சேனை கோறளைப்பற்று மத்தி தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அரச காணிகளில் குடியிருந்து அவற்றை பராமரிக்கின்ற மக்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மாகாண காணி நிருவாகத் திணைக்களத்தின் அனுமதி பெற்று காணிக் கச்சேரிகளை நடாத்திய பயனாளிகளுக்கான காணி அனுமதிப் பத்திரம் வழங்கும் 3 ஆம் கட்ட நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.றமீஸா தியாவட்டவான் கிராம சேவகர் எம். எம்.ஏ. சாதாத், காணி வெளிக்கள போதன ஆசிரியர் சி.எம்.எம். சமீம் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குருமண்வெளியில் பயனாளியிடம் பிரதேச செயலரால் வீடு கையளிப்பு

காரைதீவு, பெப். 17

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் குருமண்வெளி -11, மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரன்விமன வீடு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் நேற்று முன்தினம் அவ் வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை சமூக ரீதியாக மேலுயர்த்துவது மற்றும் வீடற்றவர்களுக்கு வீடு வழங்குவது நோக்கமாகக் கொண்டு 2023ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது இவ் ரன்விமன வீட்டு வேலைத்திட்டம் ஆகும்.

அதன் கீழ் திருமதி.கருணாகரமூர்த்தி ராதிகா அவர்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 750,000/- வழங்கப்பட்டிருந்ததோடு, பயனாளியின் பங்களிப்பாக



ரூபா 1700,000/-ரூபாவுமாக மொத்தம் 2450,000/- செலவில் இவ்வீடு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி.சத்தியகெளரி தரணிதரன், தலைமையக முகாமையாளர் திருமதி.புவனேஸ்வரி ஜீவகுமார், கருத்திட்ட முகாமையாளர் திருமதி.விமலராணி யோகேந்திரன், எருவில் வங்கி முகாமையாளர் .எஸ். ஆனந்தமோகன், சமூக அபிவிருத்தி உதவியாளர் தெ.உதயசுதன், கிராம சேவை உத்தியோகத்தர் திருமதி.நிரோசினி பிரசாந்த, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பே.அச்சுதன், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி. மதனப்பிரியா சுந்தரலிங்கம், எஸ்.ஜெயகாந்தன், அலுவலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆலய நிர்வாகிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# கடமை நிறைவேற்று அதிபரை விலக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

திருமலை, பெப். 17

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட குட்டிக்கராச்சி இஹ்சானிய வித்தியாலயத்தில் புதிதாக அதிபர் பரீட்சையில் சித்தி அடைந்த அதிபரை, கடமையைச் செய்ய இடையூறாக உள்ள தற்காலிக அதிபரை வெளியேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று காலை 6.00 மணிக்கு பாடசாலைக்கு முன்னால் இடம் பெற்றது.

ஏற்கனவே இப்படசலையில் பதில் கடமை அதிபராக ஈடுபட்டு வந்த அதிபர், புதிய அதிபரை கடமை ஏற்க இடையூர் ஏற்படுத்தி வருவதாக கூறி அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது

இந்த ஆர்ப்பாட்டத்தில் அப்பாடசாலை சமூகம்,மற்றும் பொதுமக்கள், மாணவர்கள் நலன் விரும்பிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பாடசாலைக்குள் மாணவர்கள் செல்லாமல் வீதி ஓரங்களில் தமது எதிர்ப்பினை தெரிவித்து இருந்தனர். இவர்களோடு ஏனையவர்களும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கிண்ணியா கொழும்பு மற்றும் கண்டி, கந்தளாய் முதலான இடங்களுக்குச் செல்லும் போக்குவரத்து வாகனங்களுக்கு இடையூறு ஏற்பட்டது.

இதனை அடுத்து கிண்ணியா வலயக் கல்வி அதிகாரிகளின் தலையீட்டினை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

# வருடாந்த பரிசளிப்பு விழா

அம்பாறை, பெப். 17

அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை சம்பு நகர் அல் - மினா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் மாணவர் மன்றமும் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ. எம்.றியாஸ் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிழ்வில் கல்வி அதிகாரிகள்,கல்வியலாளர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

2023 /2024 கல்வி ஆண்டில் திறமை காட்டிய மாணவர்களுக்கு அதிதிகளினால் சான்றி



தழ்கள் மற்றும் பரிசுகள் என்பன வழங்கி வைக்கப்பட்தோடு மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. (அ)

# ரஷ்யாவுடனான போரில் உக்ரைன் வெற்றி பெறாது

## போரில் தோற்றால் புடின் கொல்லப்படுவார்

நியூயோர்க், பெப். 17

**உக்ரைனுடனான போரில் ரஷ்யா தோற்காது எனவும் தோல்வியடைந்தால் ரஷ்ய ஜனாதிபதி விளாடீமிர் புடின் கொல்லப்படுவார் எனவும் உலக செல்வந்தரான எலன் மாஸ்க் தெரிவித்துள்ளார்.**

**அமெரிக்க குடியரசு கட்சியின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற விவாதத்தின் போதே மாஸ்க் இந்த கருத்தை முன்வைத்துள்ளார்.**

**உக்ரைனுடனான போரில் ரஷ்யா தோற்பதற்கான வாய்ப்பில்லை, புடின் தோற்றால் கொல்லப்படுவார்.**

உக்ரைன் போர் விடயத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடின் பின் வாங்குவார் என நினைக்க வில்லை. தோற்றால், அவரை கொலை வாய்ப்பு உள்ளது.

இதனால். புடின் இந்தப் போரைத் தொடருவார். புடின் கடும் அழுத்தங்களை எதிர் நோக்கி வருகின்றார் எனவும் மாஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

எலன் மாஸ்க் இப்படியான கருத்துக்களை வெளியிட்டிருப் பது இது முதல் முறையால்ல, கடந்த காலங்களிலும் அவர் இப்படியான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளி யிட்டுள்ள மாஸ்க், ரஷ்ய ஜனா திபதி குறித்து நான் கடந்த காலங் களிலும் இதனையே கூறியிருந் தேன்.

அப்போது என்னை பலரும் விமர்சித்தனர்.ஆனால் உண்மை வேறு என்பதை அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைன் வெற்றி பெறுவதற் கான வாய்ப்புகள் இல்லை.



அந்நாடு வெற்றி பெறும் என்று எதிர்ப்பார்ப்பது சிறந்ததல்ல.

போர் நீண்டகாலம் நடந் தால் உக்ரைனுக்கு ஆபத்து ஏற் படும். அத்துடன் அமெரிக்க அறிவித்துள்ள பொருளாதார உதவியால் உக்ரைனுக்கு எந்த பயனும் ஏற்படாது.

மேலும் ரஷ்யாவை அடக் குவதற்கு எமது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தை தவிர வேறு எந்த நிறுவனங்களும் சிறப்பான எத னையும் செய்யவில்லை.

ஸ்பேஸ் எக்ஸ் ஏற்கனவே உக்ரைனுக்கு ஸ்ரார்லிங் சேவை களை வழங்கி வருகிறது. ரஷ்யா வுக்கு எதிரான உக்ரைன் தகவல் தொடர்பு துறைக்கு இது முக்கி யமானதாக மாறிவிட்டது.

எது எப்படி இருந்த போதி லும் போலில் ஈடுபட்டுள்ள இருத்தரப்பிலும் உயிரிழப்பு களை தடுப்பதே தமது நோக் கம் என எலன் மாஸ்க் கூறியுள் ளார்.

(அ)

# பாகிஸ்தான் பிரதமராக நவாஸின் சகோதரர்!

இஸ்லாமாபாத், பெப். 17

பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் ஷெபாஸ் ஷெரீப் பதவியேற் பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் எந் தக் கட்சிக்கும் அறுதிப் பெரும் பான்மை கிடைக்காமல் இழு பறி நீடித்தது.

இம்ரான்கான் ஆதரவு வேட் பாளர்கள் எதிர்க்கட்சி வரிசை யில் அமரப் போவதாக அறிவித்த நிலையில், நவாஸ் ஷெரீப்பும் பிலாவல் பூட்டோவும் கூட் டணி அரசு அமைக்கத் திட்ட மிட்டனர்.


இதில் பிரதமர் பதவி யாருக்கு என்று நவாஸ் ஷெரீப், பிலாவல் பூட்டோ இடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டன.

இதையடுத்து, நவாஸ் ஷெரீப் தரப்புக்கு வெளியில் இருந்து ஆதரவளிப்பதாக பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

நவாஸ் ஷெரீப் பிரதமரா வார் எனக் கருதப்பட்ட நிலை யில், ஷெபாஸ் ஷெரீப்பை பிரத மராக அவர் பரிந்துத்துள்ளமை யானது தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(அ)

# ஹமாஸ் முக்கிய தளபதி கைது!




ஜெருசலேம், பெப். 17

இஸ்ரேல் படைகளுக்கு எதி ராக சமரியா பகுதியில் துப் பாக்கிச் சூட்டுத் தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பின் முக்கிய தளபதியான உமர் பையத்தை கைது செய்துள்ள தாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

மேலும் ஜெனின் பகுதியில் வைத்து இக்கைது நடவடிக்கை இடம்பெற்றதாகவும், இதன் போது, இஸ்ரேல் வீரர்கள் இரு வருக்கு லேசான காயம் ஏற்பட் டதாகவும் அவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை உமர், இஸ்ரே லுக்கு எதிராக மேலும் பல தாக் குதல்களை நடத்தத் திட்ட மிட்டிருந்தார் எனவும் விசார ணைகளில் இருந்து தெரியவந் துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே 4 மாதங்களுக்கும் மேலாக போர் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பிரான்ஸுக்கும் உக்ரைனுக்கும் இடையே முக்கிய உடன்படிக்கை

## பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம்



பாரிஸ், பெப். 17

பிரான்ஸிற்கும் உக்ரைனுக் கும் இடையில் இருதரப்பு பாது காப்பு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி அலுவல கம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி பிளடிமீர் செலன்ஸ்கி ஆகியோர் கையோப் பம் இடவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த உடன்படிக்கையா னது இன்று வெள்ளிக்கிழமை கைச்சாத்திடப்படவுள்ளதாக வும் ஜனாதிபதி அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ரஷ்ய-உக்ரைன் போர் நடைபெற்றுவரும் நிலையில் அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் உக்ரை யினுக்கு பல்வேறு உதவிகளை வழங்கிவரும் நிலையில் பிரான் ஸினால் மேற்கொள்ளப்பட வுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் அரசியல் அரங்கில் பேசு பொரு ளாக அமைந்துள்ளது.

(அ)

# ராஃபாமீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் பேரழிவு ஏற்படும்!

## ஐ.நா. மனிதாபிமான பிரிவு எச்சரிக்கை

ஜெனிவா, பெப். 17

காஸாவின் தென்பகுதியில் அமைந்துள்ள ராஃபா நகரம் மீது இஸ்ரேல் படையினர் தாக் குதல் நடத்தினால் பேரழிவு ஏற் படக்கூடும் என ஐக்கிய நாடு கள் அமைப்பின் மனிதாபிமான உதவிகள் தொடர்பான பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

காஸா மீது நடத்தப்படும் மிக கடுமையான தாக்குதல்க ளால் பலஸ்தீன மக்கள் நிலைகு லைந்திருப்பதாக ஐநாவின் மனி தாபிமான உதவிகள் பிரிவின் தலைவர் மார்ட்டின் கிரிஃபித்ஸ் தெரிவித்துள்ளார்.

இருப்பிடங்கள், உறவினர் கள் மற்றும் உடமைகளை இழந்து சொந்த இடங்களை விட்டு வெளியேறிய பலஸ்தீன மக்கள் ராஃபாவில் தஞ்சமடைந் துள்ளனர்.

இந்த நிலையில், ராஃபா நக ரத்தையும் இஸ்ரேல் தாக்கினால் பெரும் மனிதப்பேரழிவு ஏற்ப டும் எனவும் கிரிஃபித்ஸ் குறிப் பிட்டுள்ளார்.

பாதுகாப்பான வேறு இடங் களுக்கு செல்ல முடியாது, 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் ராஃபாவில் சிக்கியுள்ளதுடன் அவர்கள் போதிய உணவு மற்றும் மருத் துவ வசதிகள் இன்றி தவிப்பதா கவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இந்த நிலையில், ராஃபா நகர் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பவது உறுதி எனவும் அவர் கவலை தெரிவித் துள்ளார்.

எது எப்படி இருந்த போதி லும் ராஃபா நகரில் ஹமாஸ் போராளிகள் மக்களுக்கு மத்தி யில் பதுங்கி இருப்பதாக இஸ் ரேலிய பிரதமர் நெத்தன்யாஹூ கூறியுள்ளதுடன் அவர்களை வேரோடு அழிக்க போவதாக வும் அந்த அழிவின் மூலமே காஸா பிரச்சினை முடிவுக்கு வரும் எனவும் தெரிவித்துள்ளார்.

இப்படியான சூழ்நிலையில், காஸாவின் ராஃபா நகர் மீது தொடர் தாக்குதலை நடத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது.

ஏற்கனவே அந்த நகரத்தின் மீது விமான குண்டு வீச்சு தாக் குதல்கள் நடத்தப்பட்டு வருகின் றன.

எந்த நேரத்திலும் இஸ்ரேல் முழுமுனை தாக்குதலை ஆரம் பிக்கலாம் என மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதனால் உயிர் தப்பிக்க ராஃபா நகரில் தஞ்சமடைந்த பலஸ்தீன மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

தாம் முன்னர் வசித்த பிரதே சங்கள் அழிக்கப்பட்டுள்ள போதி லும் தாம் மீண்டும் அங்கு செல்ல போவதாக மக்கள் கூறுகின்றனர்.

மேலும் காஸா நிலப்பரப் பில் எங்குமே பாதுகாப்பான இடங்கள் கிடையாது எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் காஸா மீதான போரில் இஸ்ரேல், பாலஸ்தீன மக்களுக்கு தீங்கு விளைவித்துள்ளதாக குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருவதுடன் அவை குறித்து அமெரிக்க விசாரணைகளை நடத்தி வருகிறது.

எனினும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தியே இஸ்ரேல் படை யினர் பாலஸ்தீனத்தின் மீது தாக்குதல் நடத்தி வருவதுடன் அந்த தாக்குதல்களில் பொது மக்கள் கொல்லப்பட்ட அமெரிக் காவின் ஆயுதங்களே காரணம் எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் அமெரிக்கா, இஸ் ரேலுக்கு தொடர்ந்தும் ஆயுதங் களை விற்பனை செய்வது வரு வது தொடர்பிலும் கண்டனங் கள் வெளியிடப்பட்டுள்ளன.

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவது சரியான விடயம்!

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, பெப். 17

**நிறைவேற்று அதிகாரமுறையை நீக்குவது சரியான நடவடிக்கை என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தான் ஏற்கனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை அனுபவித்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.**



நாட்டின் அரசியல் நிலைமை எவ்வாறு உள்ளது என்ற செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு நாட்டின் அரசியல் நிலை சிறப்பானதாக உள்ளது. நிறைவேற்று அதிகார முறையை நீக்குவது நல்லது என மகிந்த ராஜபக்ச கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முழு நாடும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுப்பதால் அதனை நீக்கவேண்டும்.

ஜனாதிபதி தேர்தலை பிற்போட முயல்வது எதிர்கட்சியினருக்கான பொறியாக அமையலாம் எங்களிற்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க குறித்து நன்கு தெரியும்.

எந்த தேர்தல் என்றாலும் எங்கள் வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள். சரியான தருணத்தில் அவர்கள் மேடைக்கு வருவார்கள். அதுவரை பொறுத்திருங்கள்-என்றார்.

ஜேவிபி தலைவரின் இந்திய விஜயம் குறித்து கருத்து தெரிவித்துள்ள மகிந்த ராஜபக்ச, இந்தியா போன்ற நாடுகளுடன் உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜேவிபி இறுதியாக உணரதலைப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது என தெரிவித்துள்ளார். (அ)

# இஸ்ரேலுக்கு இலங்கையிலிருந்து நேரடி விமான சேவைக்கு ஒப்பந்தம்

கொழும்பு, பெப். 17

இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேரடி விமான சேவையை ஆரம்பிக்கும் ஒப்பந்தம் நேற்று முற்பகல் கைச்சாத்திடப்பட்டதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதில் ஏற்படும் தாமதங்களைத் தடுப்பது இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு கூறினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி விமான சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் போக்குவரத்து அமைச்சு மற்றும் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சுக்கும் இடையே கைசாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் மூலம் பயணிகளுக்கு வசதியை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

அத்துடன் இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் தற்போதுள்ள சேவை உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதில் ஏற்படும் தாமதத்தை தடுப்பது, இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

பல இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் இஸ்ரேலிய போக்குவரத்து அமைச்சர் எம்மிடம் குறிப்பிட்டார்-என்றார். (அ)

# எரிபொருள் விநியோகத்தின் 13 இலட்சம் தரவுகள் அழிப்பு

கொழும்பு, பெப். 17

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய முனைய நிறுவனத்தின் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் எரிபொருள் விநியோகம் என்பனவற்றுடன் தொடர்புடைய 13 இலட்சம் தகவல்கள் (தரவுகள்) பிரதான தரவுக் கட்டமைப்பிலிருந்து அல்லது எஸ்.ஏ.பி. தளத்திலிருந்து அழிக்கப்பட்டு அல்லது மாற்றப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டிலிருந்து தரவு அழிப்பு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தமது எக்ஸ் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

எரிபொருள் நெருக்கடி நிலவிய 2022 ஆம் ஆண்டிலேயே பெருமளவான தரவு அழிப்பு செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கே.பி.எம்.ஜி நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், அமைச்சர் இந்த விடயங்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

இது தொடர்பான முழுமையான அறிக்கை, எதிர்வரும் வாரம் கே.பி.எம்.ஜி நிறுவனத்தால் வழங்கப்பட்ட பின்னர், அதனை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்க தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த அறிக்கையை மேலதிக நடவடிக்கைகளுக்காக அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் கணக்காய்வாளர் திணைக்களத்திற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார். (அ)

# வடக்கு மாகாணப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் விமானப்படை!

கொழும்பு, பெப். 17

இலங்கை விமானப்படையின் 73ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்திலுள்ள 73 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவுள்ளதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை விமானப்படையின் 73ஆவது ஆண்டு நிறைவு தினம் எதிர்வரும் மார்ச் மாதம் 02 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான நட்புறவின் சிறகுகள் எனும் தொனிப்பொருளில் பல விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக களனி ரஜமகா விகாரையில் விசேட பூஜைகள் மற்றும் சர்வ மத சடங்குகளுக்கு முன்னுரிமை அளித்து, 73ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வருடமும் விமானப்படைத் தலைமையகத்தில் விமானப்படையின் மரியாதை அணிவகுப்பு நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்கு இணங்க, தரமான கல்வி மற்றும் சுற்றாடல் பேண்தகைமை ஆகியவற்றில் கவனம் செலுத்தி, வடக்கு மாகாணத்தில் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி மேலும் தெரிவித்துள்ளார்.

அதன்படி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கி அபிவிருத்தி செய்யப்படவுள்ள 73 பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளன.

குறித்த பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, அதற்காக 100 மில்லியன் ரூபா நிதி மதிப்பிடப்பட்டுள்ளதாக விமானப்படைத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மார்ச் மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் தொழில்நுட்ப, கல்வி கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை விமானப்படையின் விமானங்கள், வளங்களின் கண்காட்சி மற்றும் விமானப்படையின் பணிகள் மற்றும் தொழில்நுட்ப கல்வி பற்றிய விழிப்புணர்வும் இடம்பெறவுள்ளது.

இந்த கண்காட்சியில் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களின் புத்தாக்க உபகரணங்களை காட்சிப்படுத்தவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# அனைத்து சந்தர்ப்பங்களிலும் விவசாயத்திற்கு முன்னுரிமை!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 17

மஹா கனதராவ குளத்தை நீராதாரமாக கொண்ட அனுராதபுரம் நீர் வேலைத் திட்டத்தை நேற்று முன் தினம் மக்கள் பாவனைக்காக கையளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இதன்போது விவசாயிகள் ஜனாதிபதியிடம் தங்களது பிரச்னைகளை நேரடியாக கூறியதோடு, அதற்கு ஜனாதிபதி சாதகமாக பதிலளித்தார்.

வேலைத் திட்டத்திற்கான எதிர்ப்பு குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, நீர்த்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதால், எதிர்ப்புக்களை கைவிடுமாறும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சிந்துக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அது தொடர்பிலான மக்களின் யோசனைகளை இரண்டு வாரங்களுக்குள் பெற்றுத்தருமாறும், அவற்றில் சாதகமான விடயங்களை விரைவில் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில்-

நாம் எல்லா சந்தர்ப்பங்களிலும் விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இது வரையில் எல்லா அரசாங்கத்திலும் நீர் வழங்கல் சபை ஒரு அமைச்சின் கீழும் நீர்ப்பாசன திணைக்களம் ஒரு அமைச்சின் கீழும் காணப்பட்டது. இம்முறை அவை இரண்டையும் ஒன்றிணைத்து ஒரு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது-என்றார். (அ)

# முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோருகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, பெப். 17

2016ஆம் ஆண்டு குரகல ஆலயத்தில் தெரிவித்த கருத்துக்களிற்காக பொதுபலசேனாவின் ஞானசாரதேரர் முஸ்லீம் சமூகத்திடம் மன்னிப்பு கோரியுள்ளார்.



எட்டு வருடங்களிற்கு முன்னர் நான் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்கள் காரணமாக மன உளைச்சலை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக நாட்டின் முஸ்லீம் சமூகத்திடம் மன்னிப்பு கோருகின்றேன் என ஞானசார தேரர் கொழும்பு உயர்நீதிமன்றத்திற்கு தகவல் அனுப்பியுள்ளார்.

எனது நடவடிக்கைகளிற்காக நாட்டில் உள்ள முஸ்லீம் மக்களிடம் ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரரின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பிலான விசாரணைகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் மார்ச்28 ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் திகதி ஆலயத்தில் ஞானசார தேரர் தெரிவித்த கருத்துக்கள் இனமத ஐக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என தெரிவித்து சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்திருந்தார். (அ)

## இந்தியத்...

பொதிகளை வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனும் பங்கேற்றார்.

தொடர்ந்து, யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிலையத்தில் நடந்த தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனை நிகழ்விலும் தூதுவர் பங்கேற்றார்.

இதேவேளை, இந்தியத் தூதுவர் நேற்று நயினாதீவுக்கும் சென்றார். (ஐ)

## தமிழிலும்...

எண்ணக்கரு ஆலோசனைக்கு அமைய, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிலான் அலஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரின் நடவடிக்கையில் உருவாக்கப் பட்டுள்ளது - என்றும் கூறப்பட்டது.

## ஒருங்கிணைப்பு...

நடைபெற்றது. இதன்போதே அவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

இதன்போது 2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட பன்முகப்படுத் தப்பட்ட நிதியில் இந்த வருடத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டது.

இதன்போது, அந்தத் திட்டங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்படவில்லை என்று கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். அத்துடன், இந்த விடயம் தொடர்பில் பதில் வழங்குமாறு வலியுறுத்தினர்.

இந்தக் கூட்டத்தில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ. கஜேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே.சிவஞானம், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸார், முப்படையினர், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ஐ)

## எனது...

பொலிஸார் கூடிய கவனம் செலுத்தி இருக்கவேண்டும். நானும் அதனை பார்த்து இருக்க வேண்டும். நானும் அது தொடர்பில் கரிசனை இல்லாமல் இருந்து விட்டேன்.

இனிவரும் காலங்களில் இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெறுமாக இருந்தால், மக்கள் பிரச்னைகள் இன்றி சந்தோசமாக நிகழ்வுகளைக் கண்டுகளிக்க கூடிய வாறான ஏற்பாடுகளைச் செய்வோம் - இவ்வாறு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## பதிலளிப்பதற்கு...

விக்கிரமசிங்க மற்றும் மகிந்த சமயவர்த்தன ஆகிய நீதியரசர்கள் ஆயம் கால அவகாசத்தை வழங்கியது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் மின்சார கட்டணம் 18 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட இந்தக் கட்டணத்தை குறைக்குமாறு உத்தரவிடக்கோரி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது பிரதிவாதிகளில் ஒருவரான மின்சக்தி அமைச்சர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி தங்களின் சமர்ப்பணங்களை முன்வைப்பதற்காக மூன்று வார கால அவகாசம் கோரினார். இதை ஏற்று நீதிமன்று கால அவகாசத்தை வழங்கியது. (ஐ)

## உசிறுவர்கள்...

தொழுகையை முடித்துக்கொண்டு சைக்கிளில் நிந்தவூரிலுள்ள கடற்கரைக்கு சென்றனர்.

அங்கு நின்று கைபேசிகளில் படம் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த போது கடல் அலை சிறுவர்கள் இருவரை இழுத்துச் சென்றது.

இதைத் தொடர்ந்து அவர்களை தேடும் பணி தொடர்ந்தது. இரவு 9 மணி வரை மீனவர்கள் அவர்களை தேடிய நிலையில் எவரும் மீட்கப்படவில்லை. இருட்டால் தேடும் முயற்சி நிறுத்தப்பட்டது. (ஐ-06)

## மயிலத்தமடு...

மேலும் தெரிவிக்கையில்,

"சிங்கள காணி ஆக்கிரமிப்பாளர்கள், தாம் அபகரித்த காணிகளில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், அருகிலுள்ள வேறு மேய்ச்சல் தரை காணிகளையும் அபகரிக்கும் நோக்குடன் புற்தரைகளையும், காடுகளையும் தீயிட்டு அழித்து வருகின்றனர். இந்தச் சம்பவம் கடந்த 14ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. இதனை வன இலாகா, வன ஜீவராசிகள் திணைக்களம் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. பரக்குவாட் களைநாசினி விசிறிய புல்தரையில் எமது கால்நடைகள் மேய்வதால் சில மாடுகள் நோய் வாய்பட்டுள்ளன. எமது வாழ்வாதாரம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. இந்த அநீதிகளைக் கேட்பதற்கும் எவருமில்லை - பார்ப்பதற்கும் எவருமில்லை." - என்றனர். (ஐ)

## தலைமன்னாரில்...

பெயர் அடையாளங்களை மறைத்து அங்கு தங்கியிருந்தார் என்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனவும் அறியவந்துள் ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

சிறுமியின் பெற்றோர் வேலைநிமித் தம் புத்தளத்தில் தங்கியுள்ளனர். இந்த நிலையில், சிறுமி தனது அம்மம்மாவுடன் வசித்து வந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு சிறுமி வீட்டுக்கு அண்மையாக உள்ள கடைக்கு சென் றுள்ளார். கடைக்கு சென்ற சிறுமியை நீண்டநேரம் காண வில்லை. இதையடுத்து வீட்டார் அவரை தேடியுள்ளனர்.

இந்த நிலையில், சந்தேகநபரிடமும் சிறுமி குறித்து விசாரித்துள்ளனர். ஆனால், அவர் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறியுள்ளார்.

இந்த நிலையில், அப்பகுதியில் உள்ள சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளை சோதித்தபோது சிறுமியின் பின்னால் சந்தேகநபர் செல்வது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து அவரை பிடித்து விசாரித்ததுடன், இரவு முழுவதும் தேடிய நிலையில் நேற்று அதிகாலை சிறுமியின் உடலம் அந்த தென்னந் தோட்டத்தின் பின் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அவரை கைது செய்த பொலிஸார் அவரிடம் விசாரித்ததில், அவரின் வயது 52 என்றும் திருகோணமலை குச்சவெளியை சேர்ந்தவர் எனவும் தெரிய வந்தது. ஆனால், அவர் தனது பெயர் விஜயேந்திரன் என்று கூறியே வசித்தார் எனத் தெரிய வந்துள்ளது.

இதேநேரம், சம்பவ இடத்துக்கு சென்ற பதில் நீதிவான் சிறுமியின் சடலத்தை பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனைக்காக மன்னார் பொது மருத்துவமனையில் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, தலைமன்னார் மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், குற்றவாளிக்கு விரைவாக தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று பதில் நீதிவானிடம் மனு ஒன்றையும் வழங்கினர். (ஐ)

### இணுவில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில்

# இருவரை காவல் கடமையில் அமர்த்த டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 17

இணுவிலில் விபத்து நடந்த இடத்தில் பாதுகாப்பான புகையிரத கடவை அமைக்கப்படும் வரை, அங்கு இருவரை பணியில் அமர்துவது என்றும் அவர்களுக்கு தமது கட்சியின் நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

இணுவிலில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ரயில் விபத்தில் தந்தையும் ஆறு மாத குழந்தையுமாக இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார்.



இந்த நிலையில், விபத்து நடந்த இடத்துக்கு நேற்று சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பவ இடத்தைப் பார்வையிட்டார்.

அத்துடன், விபத்து நடந்த இடத்தில் பாதுகாப்பான கடவை அமைக்க புகையிரதத் திணைக்களத்துடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித் தார். அத்துடன், பாதுகாப்பான கடவை அமைக்கப்படும் காலம்வரை அந்தப் பகுதியை சேர்ந்த இரு இளைஞர்களை பணியில் இருக்குமாறும். அவர்களுக்கான ஊதியத்தை தனது கட்சியின் நிதியி லிருந்து வழங்குவதாகவும் உறுதியளித்தார். (ஐ-2)

# கிளிநொச்சி விபத்தில் ஒருவர் படுகாயம்!

கிளிநொச்சி, பெப். 17

கிளிநொச்சி பரந்தன் ஏ -35 வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புளியம்பொக்கணை பகுதியிலிருந்து மிதிவெடி அகற்றும் பணியாளர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்று வீதியில் நின்ற எருமை மாடுகளுடன் மோதிய போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது 2 எருமை மாடுகள் உயிரிழந்தன. அத்துடன், இரண்டு மாடுகள் காயமடைந்தன.

இதேவேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பேருந்துடன் மோதிய எருமை மாட்டுடன் மோதிய தால் நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## ஐக்கிய...

வருமாறு,

"நாட்கூலி தொழிலாளர் என்ற தாழ்நிலை நிலையில் இருந்து, பெருந்தோட்ட மக்களை நிலவுரிமை கொண்ட தொழில் முனைவோராக மாற்றுவோம்" என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் ஒருமுறை பகிரங்கமாக கூறி எம்முடன் உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளார்.

இது தமிழ் முற்போக்கு கூட்டணியின் தூரநோக்கு சிந்தனையின் வெற்றி. ஐக்கிய மக்கள் சக்தி அரசு உருவாகுமானால், அப்போது, எமது மக்கள் தொடர்பாக முன்னெடுக்ககூடிய நிலவுரிமை திட்டங்கள் என்ன என்பது பற்றிய எழுத்து மூலமான உள்ள சமூகநீதி உடன்பாடு இதுவாகும். இது தேர்தல் ஒப்பந்தம் அல்ல. தேர்தல் ஒப்பந்தம், தேர்தல் வரும்போது வரும்.

தேசிய அளவில் நடந்துள்ள இந் நிகழ்வு பற்றி கேள்வி எழுப்பும், ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஐ. தே. க. கூட்டணி, அநுரகுமாரவின் தேசிய மக்கள் சக்தி கூட்டணி தரப்புகளுக்கு எமது இந்த சமூகநீதி உடன்பாடு விபரங்களை அனுப்பி வைக்க நாம் தயார். அவர்களது பதில் நிலைப்பாடுகள் என்ன என அவர்கள் எமக்கு அறிவித்தால் அவை பற்றியும் கலந்தாலோசிக்க நாம் தயார். ரணிலும், அநுரவும் தயாரா?

இந்நாட்டில் வாழும் 15 இலட்சம், மலையக தமிழ் மக்கள் என்ற இன அடையாளத்துக்குள், சரி பாதி சனத்தொகை இன்னமும் பெருந்தோட்டங்களில் வாழ்கிறார்கள். இந்நாட்டின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும்போது, இந்த பெருந்தோட்ட மக்கள், சமூக பொருளாதார வளர்ச்சியில் இந்நாட்டிலேயே பின்தங்கியவர்கள். இதற்கு காரணம், மலைநாட்டு அரசியல்வாதிகள் மட்டுமே என்ற கவர்ச்சிக்கரமான பிரசாரம் முன்னேடுக்கப்படுகிறது. இது வரலாற்றை திட்டமிட்டு மூடி மறைக்கும் சூழ்ச்சி. இந்த கண்ணாம்பூச்சி கவர்ச்சி கதையில் நாம் மயங்கி விடக்கூடாது.

மலைநாட்டு அரசியல்வாதிகள் மீது பெரும் குற்றச்சாட்டுகள் உள்ளன. அவற்றில் உண்மைகளும் உள்ளன. ஆனால், எமது மக்களின் குறை வளர்ச்சிக்கு முதல் மூன்று காரணங்கள், பேரினவாதம், இந்திய அரசு, இங்கிலாந்து அரசு ஆகியவையாகும். சுதந்திரம் பெற்றவுடன் எமது குடியுரிமை, வாக்குரிமைகளை பறித்து எமக்கு இன்று காணி, கல்வி, சுகாதாரம் ஆகிய உரிமைகள் முழுமையாக இல்லாமல், எம்மை பெருந் தோட்ட அமைப்புக்குள்ளே இரண்டாந்தர பிரஜைகளாக வைத்திருப்பது, பேரினவாதம் ஆகும்.

எம்மை கேட்காமலே, எம்மில் பெரும்பான்மையோரை நாடு கடத்தி, எம்மை அரசியல்ரீதியாக பலவீனப் படுத்தியது இந்திய அரசு ஆகும். எம்மை இங்கே அழைத்து வந்து, எமது உழைப்பில் நன்கு சம்பாதித்து விட்டு, எம்மை அம்போ என விட்டு ஓடியது இங்கிலாந்து அரசு ஆகும். இந்த வரலாற்றால், ஏற்பட்டுள்ள, தாழ்நிலைமைகளில் இருந்து வெளியே வருவது சுலபமான காரியம் அல்ல. இந்த மூன்றுக்கும் பிறகுதான், மலைநாட்டு அரசியல் கட்சிகளின் பொறுப்பு வருகிறது. அதிலும், தமிழ் முற்போக்கு கூட்டணி, எட்டு ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டு, ஒரே ஒருமுறை மட்டும் ஆட்சியில் இருந்த முற்போக்கு அரசியல் இயக்கமாகும்.

தேசிய, சர்வதேசிய அரங்குகளில் எமது பிரச்னைகளை காத்திரமாக எடுத்துப்பேசி, முன் வைத்து, தீர்வு தேடும் இயக்கம் எமது கட்சியாகும். அதன் ஓர் அங்கம்தான், "நாட்கூலி தொழிலாளர் என்ற தாழ்நிலை நிலையில் இருந்து, பெருந்தோட்ட மக்களை நிலவுரிமை கொண்ட தொழில் முனைவோராக மாற்றுவோம்" என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை, மீண்டும் ஒருமுறை பகிரங்கமாக கூறவைத்து, நாம் செய்துகொண்டுள்ள சமூகநீதி உடன்பாடாகும் -என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே மணல் திட்டில் வழிபட்டார் இந்தியத் தூதர்!

யாழ்ப்பாணம், பெப். 17

**இலங்கைக்கான இந்திய தூதர் சந்தோஸ் ஜா, இராமர் பாலம் எனப்படும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 2ஆவது மணல் திட்டில் சமய வழிபாட்டில் ஈடுபட்டார்.**



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பகுதியில் ஆங்காங்கே மணற்திட்டுக்கள் காணப்படுகின்றன. ஐதீகக்கதையான இராமாயணத்தில், வானர சேனைகள் அமைத்த பாலம் பற்றிய கூற்று உள்ளது. அந்த பாலத்தின் எச்சங்களென இந்த மணற்திட்டுக்களை கூறுவோரும் உள்ளனர்.

எனினும், அது விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட விடயமல்ல. இந்திய பெரு நிலப் பரப்பிலிருந்து இயற்கை காரணங்களால் இலங்கை தீவு பிரிந்த போது உருவான எச்சங்களாக அவை கருதப்படுகின்றன.

எனினும், இந்திய அரசியலில் மதம் தீவிர பங்காற்றும் நிலைமையில், இலங்கைக்கான இந்திய தூதர்கள் இந்த மணற்திட்டுக்களுக்கு சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபடுவது வழக்கம்.

இந்த வகையில், இலங்கைக்கான புதிய இந்திய தூதர் சந்தோஸ் ஜாவும், இராமர் பாலத்தில் வழிபடுவதாக குறிப்பிட்டு, 2ஆவது மணற் திட்டில் நேற்று வழிபாடு செய்தார். (அ)

# எத்தனை தடை, சூழ்ச்சி வந்தாலும் முறியடிப்போம்

### கூறுகிறார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, பெப். 17

கட்சிக்கு எதிராக எந்த சூழ்ச்சிகள் , தடைகள் வந்தாலும் மக்களின் ஆத்ம பலத்துடன் அதனை முறியடிப்போம் என தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட நீதிமன்றங்களில் மாநாட்டுக்கு தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளை அடுத்து , இரு மாவட்ட நீதி மன்றங்களினாலும், மாநாட்டிற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே கட்சியின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எந்த வழக்கையும் எதிர்கொள்ளத் தயார். எமக்கெதிரான சூழ்ச்சிகள் , தடைகளை நாம் மக்களின் ஆத்ம பலத்துடன் முறியடிப்போம்.

என்னையும் எனது கட்சியையும் குழப்பும் , அச்சுறுத்தும் வகையில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றை கண்டு நாம் அஞ்சப் போவதில்லை.

என்னை தலைவராக ஏற்றுக்கொண்ட கட்சியையும் எமது மக்களையும் இப்படியான சூழ்ச்சிகளால் முடக்க முடியாது. எத்தனை வழக்குகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். நீதி நிச்சயம் வெல்லும் - என்றார். (அ)

# மக்களின் நிலங்களை சுவீகரிக்க முடியாது!

### அங்கஜன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 17

விமான நிலைய விஸ்தரிப்புக்காக மக்கள் மீள குடியேறியுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என சுதந்திர கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் மீள குடியேறியுள்ள வலி வடக்கு பிரதேசத்தின் குரும்பசிட்டி ஜே/242, கட்டுவன் ஜே/238, கட்டுவன் மேற்கு ஜே/239, குப்பிளான் வடக்கு ஜே/211, மயிலிட்டி தெற்கு ஜே/240 கிராமங்களில் விமான நிலைய விஸ்தரிப்புக்கென காணி அளவீடுகள் இடம்பெறுவதாக மக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அது தொடர்பில் எனது கவனத்துக்கும் கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இவ்விடயத்தை உள்ளடக்க வேண்டும் என்றும், மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கோரி மாவட்ட செயலாளருக்கு கடந்த 12 ஆம் திகதி அன்று எழுத்து மூலம் கோரியிருந்தேன்.

இந்நிலையில், இன்று(நேற்று) இடம்பெறும் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில், காணி விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடலின்போது இப்பிரச்னையை நானும், சுமந்திரன் எம்.பியும் முன்வைத்திருந்தோம்.

விமான நிலைய விஸ்தரிப்புக்காக விமான நிலையத்துக்கு வடக்கே காணி பெற திட்டமிட்டுள்ள நிலையில், விமானநிலையத்துக்கு தெற்கே மக்களது வாழ்விடங்களில் அளவீடு செய்ய வேண்டியதன் அவசியம் ஏன் என கேள்வி எழுப்பியிருந்தோம்.

இதற்கு, குறித்த அளவீடுகள் காணி சுவீகரிப்புக்காக மேற்கொள்ளப்படவில்லை என்றும், மதிப்பீட்டு அறிக்கைக்காக மேற்கொள்ளப்படுவதாகவும், இது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளின் பொறுப்பு என்றும் மாவட்ட செயலரால் கூட்டத்தில் பதில் தரப்பட்டது.

மேலும் எக்காரணத்தைக்கொண்டும் விமான நிலையத்துக்கு தெற்கே மக்கள் மீள குடியேறியுள்ள காணிகளை விமான நிலையத்துக்காக சுவீகரிப்பதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்றும் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (அ)

# பரீட்சை வினாத்தாளை அனுப்ப மறந்த வடக்கு மாகாண கல்வித் திணைக்களம்

யாழ்ப்பாணம், பெப். 17

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில், தரம் 10 மாணவர்களுக்கான தொகுதிப் பாடங்களில் ஒன்றான தமிழ் இலக்கிய நயம் பரீட்சை வினாத்தாளை வடமாகாண கல்வித் திணைக்களம் அனுப்ப மறந்ததால் பரீட்சை மண்டபங்களில் நேற்று முன் தினம் ஆசிரியர்களும் மாணவர்களும் குழப்பமடைந்துள்ளனர்.

10ஆம் தர மாணவர்களுக்கான தொகுதிப் பாடங்களில் ஒன்றான தமிழ் இலக்கியம் இரண்டாவது பகுதிப் பரீட்சை நேற்று முன்தினம் காலை இடம்பெறுவவிருந்தது.

இதன்போதே வடமாகாணக் கல்வித் திணைக்களம் பரீட்சை வினாத்தாளை பாடசாலைகளுக்கு அனுப்பாதமை தெரியவந்தது.

இதையடுத்து பி.டி.எவ் வடிவில் வினாத்தாள்கள் அனுப்பப்பட்டு அவை அவசர அவசரமாக பாடசாலைகளில் பிரதியெடுக்கப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

பாடசாலைகளில் பிரதியெடுக்கும் வசதி (பிறிண்டர்) இல்லாத பாடசாலைகள் மாற்று ஏற்பாடுகளுக்காக பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், குறிப்பிடப்பட்ட நேரத்தை விட தாமதமாகவே பரீட்சைகள் ஆரம்பித்தன.

அனைத்துப் பாடசாலைகளிலும் ஒரே நேரத்தில் பரீட்சைகள் ஆரம்பமாகின்றமை உறுதிப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ் தெரிவிக்கையில்-

பரீட்சை வினாத்தாள்கள் அனுப்பப்பட்டன. நான்கு கேள்விகளே அதில் இடம்பெறவில்லை. அந்தக் கேள்விகள் பாடசாலைகளுக்கு பி.டி.எவ் வடிவில் அனுப்பப்பட்டு பிரதியெடுத்துக் கொடுக்கப்பட்டன - என்றார்.

ஆயினும் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அதிபர்கள் பரீட்சை வினாத்தாள்கள் தமக்கு கிடைக்காதமையை உறுதிப்படுத்தியுள்ளனர். (அ)

# நீக்கப்படுகிறார் பொன்சேகா?

கொழும்பு, பெப். 17

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து நீக்கப்பட வுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

சரத் பொன்சேகாவை வெளியேற்றுவது குறித்த தீர்மானம் விரைவில் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சரத் பொன்சேகாவை கட்சியில் இருந்து நீக்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து கேள்வி எழுந்த போது, அத்தகைய நடவடிக்கை சட்டபூர்வ நடைமுறைக்கு வழிவகுக்கும் என பரிந்துரைக்கப்பட்டது.

இருப்பினும், இறுதியில் சரத் பொன்சேகாவை தவி சாளர் பதவியில் இருந்து நீக்குவதற்கான அதிகாரம் கட்சியின் தலைவருக்கு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சரத் பொன்சேகாவின் நிலைப்பாடு தொடர்பில் ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அவர் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதன் தலைமைகள் குறித்து தொடர்ந்து பகிரங்கமாக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அண்மையில் நடந்த கலந்துரையாடல், சரத் பொன் சேகா விரைவில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வார் என்ற யூகங்களுக்கு வழிவகுத்தது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் அறிவிப்பொன்றை பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா விரைவில் வெளியிடுவார் என்ற அறிவிப்பொன்று அண்மையில் வெளியாகியிருந்தது.

சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி யினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருந்த நிலையில், அதற்கு முன்னதாக கட்சியின் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்து, அங்கத்துவத்தில் இருந்தும் விலகிக்கொள்வதற்கு அவர் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# சஜித்துடன் இணையும் சு.க. முக்கியஸ்தர்கள்

கொழும்பு, பெப். 17

சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர்கள் 9 பேர் விரைவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் இணையவுள்ளதாக எதிர்க்கட்சியின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

கொழும்பு மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் மாநகர சபையை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களே இவ்வாறு இணைய உள்ளனர்.

இந்தக் குழு திடீரென ஐக்கிய மக்கள் சக்தியில் இணையாது என்றும் கட்டம் கட்டமாக இணைய உள்ளதாகவும் சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, சு.கவின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவுக்கு பயணமொன்றை மேற்கொண்டுள்ள நிலையிலேயே இந்தக் குழு சஜித் தரப்புடன் இணைகிறது.

இது தொடர்பில் அறிந்துள்ள மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்டவர்களிடம் அதிருப்தியை வெளியிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# டக்கெற்றின் அதிரடி சதத்தால் இங்கிலாந்து அபார தொடக்கம்!




ராஜ்கோட், பெப். 17

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 207 ஓட்டங்களை குவித்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 445 ஓட்டங்களை குவித்துள்ளது.

ராஜ்கோட்டில் நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ரோஹித் சர்மா, ஜடேஜாவின் அபார சதம் மூலம் முதல்நாள் ஆட்டம் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 326 ஒட்டங்கள் எடுத்தது. ஜடேஜா 110, குல்தீப் யாதவ் ஓர் ஒட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று தொடங்கிய நிலையில் குல்தீப் யாதவ் 4 ஓட்டங்களில் அண்டர்சன் பந்திலும், ஜடேஜா 112 ஓட்டங்களில் ஜோ ரூட் பந்திலும் அடுத்தடுத்த ஓவர்களில் ஆட்டமிழந்தனர்.

இதன்பின் ரவிச்சந்திரன் அஸ்வின், துருவ் ஜூரல் இருவரும் கூட்டணி அமைத்தனர். நிதானமாக ஆடிய இந்தக் கூட்டணி 70 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்தது.

இதனால் இந்திய அணி 400 ஓட்டங்களை தொட்டது. பின்னர் 37 ஓட்டங்களில் அஸ்வின் வெளியேற, 46 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் துருவ் ஜூரல் அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பை தவறவிட்டு ஆட்டமிழந்தார்.

இறுதிக்கட்டத்தில் பும்ரா 26 ஓட்டங்கள் சேர்க்க 445 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது இந்திய அணி.

இங்கிலாந்து தரப்பில் மார்க் வூட் 4 விக்கெட்களையும் ரெஹான் அகமது 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது இங்கிலாந்து அணி. ஷாக் கிராவ்லி, பென் டக்கெற் இணை தொடக்கம் கொடுத்தது. இருவரும் ஓரளவுக்கு சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். அணி 89 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கிராவ்லி 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடி அரைச்சதம் கடந்த டக்கெற்றுடன் இணைந்தார் ஒல்லி போப். இருவரும் இந்திய பந்துவீச்சுகளை சிறப்பாக சமாளித்தனர்.

பென் டக்கெற் சிறப்பாக ஆடி 88 பந்துகளில் 19 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 100 ஓட்டங்களை எடுத்தார். இது அவரின் மூன்றாவது டெஸ்ட் சதமாகும். ஒல்லி போப் 39 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் இங்கிலாந்து அணி 35 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 207 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பென் டக்கெற் 133 ஓட்டங்களுடனும் ஜோ ரூட் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும். (ஐ)



# 500 விக்கெட்களை வீழ்த்தினார் அஸ்வின்!

ராஜ்கோட், பெப். 17

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 500 விக்கெட்கள் வீழ்த்தி சாதனை படைத்தார் இந்தியாவின் ரவிச்சந்திரன் அஸ்வின். இந்த சாதனையை படைத்த இரண்டாவது தமிழராகவும் இவர் உள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டி இந்தியாவின் ராஜ்கோட்டில் நடக்கிறது. இதில், நேற்று இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது.

ஜாக் கிராவ்லி, பென் டக்கெற் தொடக்கம் கொடுத்தனர். கிராவ்லியை 15 ஓட்டங்களில் ஆட்டமிழக்க செய்தார் அஸ்வின். இது அவரின் 500ஆவது டெஸ்ட் விக்கெட்டாக பதிவானது. இதன் மூலம் அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட்கள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் இணைந்துள்ளார். 98 போட்டிகளில் அவர் இந்த சாதனையை எட்டியுள்ளார்.

உலகளவில் 500 விக்கெட்களை கைப்பற்றிய வீரர்களின் பட்டியல் வருமாறு,

முத்தையா முரளிதரன் - 800 விக்கெட்கள், ஷேன் வோர்ண் - 708 விக்கெட்கள், ஜேம்ஸ் அண்டர்சன் - 690 விக்கெட்கள், அனில் கும்ப்ளே - 619 விக்கெட்கள், ஸ்ரூவர்ட் பிரொட்- 604 விக்கெட்கள், கிளென் மெக்ராத் - 563 விக்கெட்கள், கொட்னி வோல்ஸ் - 519 விக்கெட்கள், நதன் லயன் - 501 விக்கெட்கள், அஸ்வின் - 500 விக்கெட்கள் (ஐ)

# 92 வருட டெஸ்ட் வரலாற்றில் நியூசிலாந்து மகத்தான வெற்றி!




ஹமில்டன், பெப். 17

தென்னாபிரிக்க அணியை 7 விக்கெட்களால் அபாரமாக வீழ்த்தியது நியூசிலாந்து அணி. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக வென்றது நியூசிலாந்து. தென்னாபிரிக்கா - நியூசிலாந்தின் 92 வருட டெஸ்ட் வரலாற்றில் தொடரை முழுமையாக நியூசிலாந்து வென்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடியது. இதில் முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் இருந்தது.

இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி ஹமில்டனில் கடந்த 13ஆம் திகதி தொடங்கியது. இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் முறையே தென்னாபிரிக்கா 242 ஓட்டங்களும் நியூசிலாந்து 211 ஓட்டங்களும் எடுத்தன.

இதையடுத்து 31 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்கா 69.5 ஓவர்களில் 235 ஓட்டங்களுக்கு சகல விக்கெட் களையும் இழந்தது. இதையடுத்து 267 ஓட்டங்கள் எடுத் தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித் தது.

நியூசிலாந்தின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய லதாம் 30 ஓட்டங்கள், கொன்வே 17 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். இதையடுத்து களம் இறங்கிய கேன் வில்லியம்சன் அபாரமாக ஆடி சதம் அடித்து அசத்தினார். இதற்கிடையில் ரவீந்திரா 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் வில்லியம்சனுடன் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய வில் யங் அரைச்சதம் அடித்தார். இறுதியில் 94.2 ஓவர்களில் 3 விக்கெட்டை மட்டுமே இழந்து நியூசிலாந்து 269 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்களால் அபார வெற்றி பெற்று 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என கைப்பற்றியது. (ஐ)

# ஐ. பி. எல். தொடர் மார்ச் இறுதியில்

## ஐ. பி. எல். தலைவர் அறிவிப்பு



மும்பை, பெப். 17

ஐ. பி. எல். 2024ஆம் ஆண்டுக்கான தொடர் பெரும்பாலும் மார்ச் மாத இறுதியில் ஆரம்பமாகும். இந்தியாவில்தான் தொடர் நடைபெறும் என்று அதன் தலைவர் அருண் துமால் தெரிவித்துள்ளார்.

ஐ. பி. எல். தொடரின் 17ஆவது தொடர் தொடங்கும் உத்தேச திகதி குறித்தும் அருண் துமால் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதன்படி, பெரும்பாலும் மார்ச் மாத இறுதியில் ஐ. பி. எல். தொடர் தொடங்கும் என்று அவர் உறுதிப்படுத்தினார். எனினும், இந்த ஆண்டு இந்தியாவில் மக்களவை தேர்தல் நடைபெற இருப்பதால் போட்டிகள் தொடங்குவதில் இருக்கும் சிக்கல்கள் குறித்து பேசிய அருண் துமால், ”பொதுத்தேர்தல் திககள் தேர்தல் ஆணையத்தால் உறுதி செய்யப்பட்ட பின்னரே ஐ. பி. எல். போட்டிகள் அறிவிக்கப்படும்.

பொதுத்தேர்தல் அட்டவணை அறிவிக்கப்படும் வரை நாங்கள் காத்திருப்போம். அதன்பிறகே திட்டமிடல்கள் தொடங்கும். இதற்காக இந்திய அரசுடன் இணைந்து செயல்படுவோம். எனினும், பெரும்பாலும் மார்ச் மாத இறுதியில் ஐ. பி. எல். தொடர் தொடங்க வாய்ப்புள்ளது. தேர்தல் திகதியை பொறுத்து எந்தெந்த மாநிலத்தில் போட்டிகளை நடத்துவது என்பது தீர்மானிக்கப்படும்” என்றும் அவர் கூறினார். (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்; முதலிடத்தில் நீடிக்கும் நியூசி.

டுபாய், பெப். 17

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் நியூசிலாந்து நீடிக்கின்றது.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடியது. இந்த தொடரை 2-0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி முழுமையாக கைப்பற்றியது.

இந்நிலையில் இந்த தொடர் நிறைவடைந்ததும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றியதன் மூலம் நியூசிலாந்து தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் நியூசிலாந்து (75%) முதல் இடத்திலும், அவுஸ்திரேலியா (55%) 2ஆம் இடத்திலும், இந்தியா (52.77%) 3ஆம் இடத்திலும், பங்களாதேஷ் (50%) 4ஆம் இடத்திலும் உள்ளன.

மேலும் இந்த பட்டியலில் 5 முதல் 9 இடங்களில் முறையே பாகிஸ்தான் (36.66%), மேற்கிந்தியத் தீவுகள் (33.33%), இங்கிலாந்து (25%), தென்னாபிரிக்கா (25%), இலங்கை (0%) அணிகள் உள்ளன. (ஐ)

# பா.ஜ.க. கொண்டுவந்த தேர்தல் பத்திரங்கள் சட்டவிரோதமானவை - உச்ச நீதிமன்றம் தீர்ப்பு!



அரசியல் கட்சிகளுக்கு பெயர் குறிப்பிடாமல் நிதி வழங்கும் தேர்தல் பத்திர நடைமுறை சட்ட விரோதமானது என்று உச்ச நீதிமன்றம் ஒருமித்த முறையில் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்திய தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் அமர்வு இந்த வழக்கை விசாரித்து வந்தது.

தேர்தல் நடைமுறைகள் வெளிப்படையாக இருப்பதற்கு தேர்தல் நிதி தொடர்பான தகவல்கள் அவசியம் என்றும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

அரசியல் சட்டப் பிரிவு 19(1)(ஏ)-இன் கீழ் தகவல் பெறும் உரிமைக்கு எதிரானதாக தேர்தல் பத்திர திட்டம் இருப்பதாகவும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

நிறுவனங்கள் அளிக்கும் நன்கொடைகள் முழுக்க முழுக்க “பதில் உதவியை எதிர்பார்க்கும்” நோக்கங்களுக்காக மட்டுமே இருப்பதால், தேர்தல் பத்திரங்கள் மூலம் கார்ப்பரேட் நன்கொடைகள் பற்றிய தகவல்களை வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறுகிறது.

**தேர்தல் பத்திரங்கள் பற்றிய தகவல்களை வெளியிட உத்தரவு**

தேர்தல் பத்திரங்கள் வழங்குவதை வங்கிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

“ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஏப்ரல் 12, 2019 முதல் இன்று வரை வாங்கப்பட்ட தேர்தல் பத்திரங்கள் குறித்த தகவல்களை தேர்தல் ஆணையத்திடம் அளிக்க வேண்டும்” என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

இந்த தகவலை மார்ச் 13, 2024க்குள் தனது இணையதளத்தில் வெளியிடுமாறு தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

15 நாட்களுக்குள் செல்லுபடியாகும், அரசியல் கட்சிகளால் எடுக்கப்படாத தேர்தல் பத்திரங்கள் வாங்குபவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.



தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதி சஞ்சீவ் கண்ணா, பி.ஆர்.கவாய், ஜே.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தீர்ப்பை ஒத்திவைத்தது.

**தேர்தல் பத்திரம் என்றால் என்ன?**

தேர்தல் பத்திரங்கள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கும் ஒரு நிதி வழிமுறையாகும். உறுதிமொழிப் பத்திரம் போன்ற இந்த தேர்தல் பத்திரத்தை இந்தியாவின் எந்தவொரு குடிமகனும் அல்லது நிறுவனமும் பாரத ஸ்டேட் வங்கியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளில் இருந்து வாங்கலாம். அவர்கள் விரும்பும் எந்த அரசியல் கட்சிக்கும் தங்களது அடையாளத்தை வெளியிடாமல் இதன்மூலம் நன்கொடை அளிக்கலாம்.

இந்திய பாஜக அரசு 2017ல் தேர்தல் பத்திர திட்டத்தை அறிவித்தது. இந்த திட்டம் 29 ஜனவரி 2018 அன்று அரசாங்கத்தால் சட்டப்பூர்வமாக செயல்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவதற்கான பத்திரங்களை பாரத ஸ்டேட் வங்கி வெளியிடும்.

முலுஊஉ விவரங்கள் உள்ள வங்கிக் கணக்கு வைத்திருக்கும் எந்த நன்கொடையாளரும் இவற்றை வாங்கலாம். தேர்தல் பத்திரத்தில் பணம் செலுத்துபவரின் பெயர் இடம்பெறத் தேவையில்லை.

இத்திட்டத்தின் கீழ், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவின் குறிப்பிட்ட கிளைகளில் இருந்து ரூ.1,000 முதல் ரூ.10,000, ரூ.1 லட்சம், ரூ.10 லட்சம் மற்றும் ரூ.1 கோடி வரை எந்த மதிப்பிலான தேர்தல் பத்திரங்களையும் வாங்கலாம்.

தேர்தல் பத்திரங்களின் ஆயுள் 15 நாட்கள் மட்டுமே. அவற்றை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க மட்டுமே பயன்படுத்த முடியும்.

மக்களவை அல்லது சட்டப் பேரவைக்கு கடந்த பொதுத் தேர்தலில் பதிவான வாக்குகளில் குறைந்தபட்சம் ஒரு சதவீத வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளிக்க முடியும்.

இத்திட்டத்தின் கீழ் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் 10 நாட்களுக்கு தேர்தல் பத்திரங்களை வாங்கலாம். லோக்சபா தேர்தல் நடக்கக்கூடிய ஆண்டில் கூடுதலாக 30 நாட்களுக்கும் இவை வெளியிடப்படலாம்.

**தேர்தல் பத்திரத்தில் இருக்கக்கூடிய சிக்கல்கள் என்ன?**

இந்தத் திட்டத்தைத் தொடங்கும் போது, தேர்தல் பத்திரங்கள் நாட்டில் அரசியல் கட்சிகளுக்கு நிதியளிக்கும் முறையை முறைப்படுத்தும் என்று இந்திய அரசு கூறியது.

ஆனால் தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளிப்பவர் யார் என்பது ரகசியமாக வைக்கப்படுவதாகவும் இது கருப்பு பணத்தை ஊக்குவிக்கும் என்றும் கடந்த சில ஆண்டுகளாக, மீண்டும் மீண்டும் கேள்வியெழுப்பப்படுகிறது.

பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் பணத்தை நன்கொடையாக வழங்குவதற்காக இந்த திட்டம் உருவாக்கப்பட்டது என்ற விமர்சனமும் உள்ளது.

இந்தத் திட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. முதல் மனுவை ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்பான Common Cause இணைந்து 2017ல் தாக்கல் செய்தன. இரண்டாவது மனுவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) 2018 இல் தாக்கல் செய்தது.

உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், தேர்தல் பத்திரத்தில் நன்கொடையாளரின் பெயர் மறைக்கப்படுவது அரசியலமைப்பின் 19(1)(ஏ) பிரிவின் கீழ் ஒரு குடிமகனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தகவல் அறியும் உரிமையை மீறுவதாக உள்ளதாக குறிப்பிட்டிருந்தன.

உச்ச நீதிமன்றத்தின் முன் எழுப்பப்பட்ட ஒரு பிரச்னை என்னவென்றால், இந்தியாவில் துணை நிறுவனங்களைக் கொண்ட வெளிநாட்டு நிறுவனங்கள் இந்திய அரசியல் கட்சிகளுக்கு நிதியளிக்க அனுமதிக்கும் வகையில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, சர்வதேச அளவில் லாபி செய்பவர்களுக்கு தங்களது சொந்த நோக்கத்தை இந்திய அரசியலிலும் ஜனநாயகத்திலும் திணிக்க வாய்ப்பு கிடைக்கிறது.

நிறுவனங்கள் தாங்கள் எந்த அரசியல் கட்சிக்கு நிதி அளித்திருக்கிறோம் என்பதை தங்களது ஆண்டு லாப நஷ்ட கணக்குகளில் தெரிவிக்க தேவையில்லை என நிறுவனச் சட்டம் 2013-இல் கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தம் குறித்து இந்த மனு கேள்வியெழுப்பியிருக்கிறது. இது அரசியல் நிதியில் வெளிப்படைத் தன்மையைக் குறைக்கும் என்றும் இது போன்ற நிறுவனங்களுக்கு தேவையற்ற சலுகைகளை வழங்க அரசியல் கட்சிகளை ஊக்குவிக்கும் என்றும் மனுதாரர்கள் கூறுகின்றனர்.

தேர்தல் பத்திரத் திட்டம் பட்ஜெட்டில் உள்ளது. பட்ஜெட் என்பது ஒரு பண மசோதா என்பதால் மாநிலங்களவை அந்த திட்டத்தில் எந்த மாற்றமும் செய்ய முடியாது.

மாநிலங்களவையில் அரசுக்கு பெரும்பான்மை இல்லாததால், எளிதாக நிறைவேற்றும் வகையில், பண மசோதாவில் தேர்தல் பத்திரத் திட்டம் சேர்க்கப்பட்டது என மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பப்பட்டது.

(16ம் பக்கம் பார்க்க)






# இந்தியாவின் டிஜிட்டல் பணப் பரிமாற்ற சேவை இலங்கையில் அறிமுகம்!

**ரஞ்சன் அருண்பிரசாத்**

இந்தியாவின் பிரபல இலத்திரனியல் பண பரிமாற்று முறையான (UPI) இலங்கையில் கடந்த வாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை மாத்திரமன்றி, மொரிஷியஸ் நாட்டிலும் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் மொரிஷியஸ் நாட்டு பிரதமர் பிரவிந்த் ஜக்நாத் ஆகியோர் இந்த அங்குரார்பண நிகழ்வில் கலந்துக்கொண்டிருந்தனர்.

காணொளி வாயிலாக இந்த அங்குரார்பண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் பிரபல பணபரிமாற்று முறையான லங்கா கியூஆர் (Lanka QR) மற்றும் லங்கா பே (Lanka PAY) நிறுவனத்துடன் இணைந்து இந்த சேவையை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்தை 2018ம் ஆண்டு பெற்றுக்கொண்ட லங்கா கியூஆர் மற்றும் லங்கா பே நிறுவனத்துடன் இணைந்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

### இந்திய பிரஜைகளை இலக்காக கொண்ட திட்டம்

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் இந்திய நாட்டு பிரஜைகளை இலக்காக கொண்டு இந்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பயன்படுத்தப்படும் யுபிஐ பண பரிமாற்று நடவடிக்கைகளை அவ்வாறே இலங்கையிலும் தற்போது மேற்கொள்ள முடியும்.

2013ம் ஆண்டு இலங்கைக்கு 14 லட்சத்து 87 ஆயிரத்து 303 சுற்றுலா பயணிகள் வருகைத் தந்துள்ளனர். அவர்களில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வருகைத் தந்துள்ளனர்.

2013ம் ஆண்டில் மாத்திரம் 3 லட்சத்து 2 ஆயிரத்து 844 இந்திய சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகைத் தந்துள்ளனர்.

இவ்வாறு நாளுக்கு நாள் இலங்கைக்கு வருகைத் தரும் இந்திய பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் பின்னணியில், இந்திய சுற்றுலா பயணிகள் சுற்றுலா பயணத்தை இலக்குப்படுத்தும் வகையில் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கைக்கு வருகைத் தரும் சுற்றுலா பயணிகள் இந்திய பணத்தை டாலராக மாற்றி, இலங்கைக்கு கொண்டு வருவதுடன், இலங்கையில் அதனை மீண்டும் இலங்கை ரூபாவிற்கு மாற்ற வேண்டிய கட்டாயம் இதற்கு முன்னர் காணப்பட்டது.

எனினும், இந்த திட்டத்தின் ஊடாக இனி இந்திய பணத்தை கையில் வைத்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது என இலங்கை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

லங்கா கியூ நிறுவனத்துடன் யுபிஐ கைகோர்த்துள்ள நிலையில், இலங்கையில் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது தமது யுபிஐ கியூஆர் (UPI QR) ஸ்கேன் செய்வதன் ஊடாக தமது கொடுப்பனவுகளை இலகுவாக செலுத்திக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பிரஜையொருவர் தனது இந்த முறையின் ஊடாக கொடுப்பனவை இலங்கையில் மேற்கொள்ளும் போது, அவரது இந்திய வங்கிக் கணக்கிலுள்ள பணம் குறைவடைந்து, இலங்கை வர்த்தகரின் வங்கி கணக்கில் இலங்கையில் ரூபாவில் அது வைப்பு செய்யப்படும்.

இந்த நடவடிக்கைகளுக்கு இடையில் இனிவரும் காலங்களில் டாலர் பயன்பாடு தேவைப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய ரூபாயை நேரடியாகவே இலங்கை ரூபாயாக பரிமாறும் வகையிலேயே இந்த சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**NNPCI International Payments Limited** மற்றும் இலங்கை **LankaPay** நிறுவனம் ஆகியன இணைந்து முன்னெடுக்கும் இந்த திட்டத்தை விரைவாக விஸ்தரிக்கும் நோக்கத்துடன் 10,000 வர்த்தக நிலையங்களில் இந்த கட்டண முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த வசதியை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம், இந்த வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை மார்ச் 2024க்குள் 65,000 ஆக உயர்த்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

### திட்ட அமலாக்கம் எப்படி?

இந்த திட்டத்தின் அமலாக்கம் தொடர்பில் லங்காபே நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஷன்ன டி சில்வா, ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்டார்.

“இலங்கையில் 3 லட்சத்து 80 ஆயிரம் மத்திய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு தற்போது லங்கா கியூஆர் முறை வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் பணபரிமாற்று முறையில் தற்போது இந்த முறை பிரபல்யமடைந்துள்ளது. இந்த கியூ ஆர் முறையில் வர்த்தகரின் வங்கி கணக்கு உள்ளிட்ட தகவல்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளன. இதுவரை காலம் இலங்கையில் இந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது இந்தியாவுடன் கைகோர்த்துள்ளோம்.




இந்தியாவில் கியூ ஆர் முறையை பெரும்பாலானோர் தற்போது பயன்படுத்துகின்றனர். இந்த நடைமுறை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் இந்திய பிரஜைகள் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் தனது இந்திய ரூபாயை பணத்தை டாலராக மாற்ற வேண்டும். அவர்கள் இலங்கைக்கு வந்த பின்னர் அந்த டாலரை மீண்டும் இலங்கை ரூபாயாக மாற்ற வேண்டும். இலங்கை ரூபாயை பெற்ற பின்னரே தமது கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும். இது பாரியதொரு நடைமுறையாக இருந்தது.

இந்தியாவில் கோடிக்கணக்கான யுபிஐ பயனாளர்கள் இருக்கின்றார்கள். இந்திய பிரஜைகள் இனி இலங்கைக்கு வரும் போது, பழைய நடைமுறையை பின்பற்ற வேண்டிய தேவை கிடையாது. கியூ ஆரை ஸ்கேன் செய்து, கட்டணங்களை செலுத்த முடியும். உடனடியாக இந்திய கணக்கிலிருந்து பணம் குறைவடைந்து, இலங்கை கணக்கில் இலங்கை ரூபாவில் பணம் வைப்பிலிடப்படும். பணபரிமாற்று முறையின் போது எந்தவொரு நபரும் அச்சப்பட தேவையில்லை. இதுவே பாரிய நன்மையாக காணப்படுகின்றது” என லங்கா பே நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஷன்ன டி சில்வா தெரிவித்தார்.

### இலங்கையர்களுக்கான நன்மை

“இலங்கையிலுள்ள சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு வங்கி கணக்குகள் இருந்த போதிலும், பெரும்பாலான வர்த்தகர்கள் அதனை பயன்படுத்துவதில்லை. அதனால், வர்த்தகர்களுக்கான வருமானம் குறித்த தகவல்கள் வங்கிக்கு தெரிவதில்லை. அதனால், பெரும்பாலான வர்த்தகர்களுக்கு வருமானம் கிடைக்கின்ற போதிலும், வங்கியினால் கிடைக்க வேண்டிய கடன் வழங்குவது உள்ளிட்ட சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை இதுவரை காணப்பட்டது.

ஆனால், இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப்படுவதன் ஊடாக வங்கிக்கு வர்த்தகர்களின் வருமானம் குறித்த தகவல்கள் தெரிய வரும். அதனால், வங்கியின் ஊடாக கிடைக்கும் சலுகைகளை இனி வர்த்தகர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். இதனூடாக சமூக பிரச்னைக்கு தீரவு கிடைக்கின்றது. அதேபோன்று, பணத்தை அச்சிடுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் பாரிய பணம் செலவிடப்படுகின்றது.

பணம் அச்சிடுவதற்காக தலா தேசிய வருமானத்திலிருந்து 1.5 வீதமான தொகை செல்கின்றது என கணிப்பிடப்பட்டுள்ளது. அதனை விநியோகிக்க வேண்டும். அதற்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். அதனை மீள்சுழற்சி செய்ய வேண்டும். அதனால், தலா தேசிய வருமானத்திலிருந்து பெருமளவான தொகையை செலவிடாது பார்த்துக்கொள்ள முடியும். இவ்வாறான புதிய நடைமுறைகளின் ஊடாக பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பு கிடைக்கின்றது.

அதேபோன்று, சுற்றுலா பயணிகளுக்கு இனி இலங்கைக்கு வருகைத் தந்து தமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடியும். இலங்கையிலுள்ள மத்திய, நடுத்தர, பாரிய வர்த்தகர்களுக்கு மாத்திரமன்றி, வர்த்தக நோக்குடன் வருகைத் தரும் பயணிகள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கும் இனி பல நன்மைகள் கிடைக்கும். இந்த நடைமுறை அறிமுகப்படுத்துவதன் ஊடாக இரண்டு தரப்பினருக்கும் இவ்வாறான பல நன்மைகள் கிடைக்கும்.” என அவர் கூறினார்.

### இந்தியர்கள் ஒரு முறை அதிகபட்சம் எவ்வளவு செலுத்தலாம்?

இந்த நடைமுறையின் ஊடாக ஒரே தடவையில் அதிகபட்சமாக இரண்டு லட்சம் ரூபாயை ஸ்கேன் செய்து, கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும் என லங்கா கியூ ஆர் நிறுவனம் அறிவித்துள்ளது.

‘குறிப்பாக 10 லட்சம் ரூபாயை செலுத்த வேண்டும் என்றால், ஐந்து தடவைகள் கியூஆரை ஸ்கேன் செய்ய வேண்டும். இந்த நடைமுறைகளை மத்திய வங்கி ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. ஆகக் குறைந்த தொகை என்ற ஒன்று இந்த முறையில் கிடையாது. இது இலங்கைக்கு மாத்திரமே பொருத்தமானது.

இந்தியா சார்பில் ஏதேனும் கொடுப்பனவு வரையறைகள் இருக்கக்கூடும். ஆனால், இலங்கையில் ஒரே தடவையில் இரண்டு லட்சம் ரூபாய் வரை செலுத்த முடியும். இதனை அதிகரிக்க முடியுமா என்பது குறித்து மத்திய வங்கி ஆராய்ந்து வருகின்றது. எந்தவொரு கொடுப்பனவையும் இதனூடாக மேற்கொள்ள முடியும்.” என நிறுவனம் குறிப்பிடுகின்றது.

### இந்தியா செல்லும் இலங்கையர்களுக்கு பொருந்துமா?



“ஒவ்வொரு படிமுறையாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதன்படி, முதல் படிமுறையாக இலங்கைக்கு வருகைத் தரும் இந்திய பிரஜைகளுக்காகவே இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது படிமுறையில் அதனை நாம் செயற்படுத்தவுள்ளோம். இலங்கை பிரஜையொருவர் இந்தியாவிற்கு செல்லும் பட்சத்தில், அவருக்கு இந்த முறையை பயன்படுத்தும் வசதி இரண்டாவது படிமுறையில் வழங்கப்படும்.” என அவர் கூறுகின்றார்.

### ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கருத்து

பல்லாயிரம் வருடங்களாக நாணய அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் இன்றும் நாணயமற்ற தொழில்நுட்ப ரீதியிலான கொடுக்கல் வாங்கலாக இரு நாடுகளுக்கும் இடையில் இன்று மாற்றம் பெற்றுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

“இந்திய - இலங்கை உறவில் இது மற்றொரு முக்கியமான தருணமாக கருதுகிறேன். சில வாரங்களுக்கு முன்பு நீங்கள் ராமர் கோயிலை திறந்து வைத்தீர்கள். அதற்கு நான் உங்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறேன். இந்தத் திட்டம் நமக்கு இடையேயான பொருளாதார மற்றும் கலாச்சார உறவை பிரதிபலிக்கிறது.

நமது இரு நாடுகளுக்கும் இடையே பல்லாயிரம் வருடங்களுக்கு மேலாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்போது பயன்படுத்திய நாணயங்கள் இன்றும் நமது அருங்காட்சியகங்களில் உள்ளன. மேலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான தென்னிந்திய நாணயங்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே, நாம் அந்த உறவை தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்துவதையே இன்று செய்கிறோம்.

எங்களுக்கு இனி நாணயங்கள் தேவையில்லை. லங்கா கியூஆர் மற்றும் ஜேடு இணைந்துள்ளன. அத்துடன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதனால் எமது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இம்முறையைப் பயன்படுத்தி கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியும். இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் மற்றும் இலங்கைக்கும் மும்பைக்கும் இடையிலான பரிவர்த்தனைகள் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுகிறன. குறிப்பாக வர்த்தகர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். இதில் சுமார் 400,000 வர்த்தகர்கள் தொடர்புபட்டுள்ளதாக கருதுகிறேன்.

எனவே, இந்திய - இலங்கை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வாய்ப்பாக இதனை அடையாளப்படுத்தலாம். எனது அண்மைய உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் போது, இந்தியப் பிரதமரும் நானும் வெளிப்படுத்திய “தொலைநோக்கு அறிக்கையை” செயல்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அண்மையில் பேர்த்தில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடன் நான் கலந்துரையாடினேன். இந்த வேலைத்திட்டத்தில் நாம் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து நாங்கள் திருப்தி அடைகிறோம். மேலும் இந்தச் செயல்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம்.” என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

(16ம் பக்கம் பார்க்க)

# பா.ஜ.க. கொண்டுவந்த தேர்தல் பத்திரங்கள்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

**இந்தத் திட்டத்தில் எந்தக் கட்சி அதிகம் பயன்பெற்றிருக்கிறது?**

2016-17 மற்றும் 2021-22 க்கு இடைப்பட்ட ஐந்து ஆண்டுகளில் மொத்தம் ஏழு தேசியக் கட்சிகளும் 24 பிராந்தியக் கட்சிகளும் மொத்தம் ரூ.9,188 கோடியை தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்றுள்ளன.

இந்த ரூ.9,188 கோடியில் பாரதிய ஜனதா கட்சியின் பங்கு மட்டும் தோராயமாக ரூ.5272 கோடி. அதாவது தேர்தல் பத்திரங்கள் மூலம் அளிக்கப்பட்ட மொத்த நன்கொடையில் 58 சதவீதத்தை பாஜக பெற்றுள்ளது.

அதே காலகட்டத்தில், தேர்தல் பத்திரங்கள் மூலம் காங்கிரஸ் தோராயமாக ரூ.952 கோடியும், திரிணாமுல் காங்கிரஸ் ரூ.767 கோடியும் பெற்றுள்ளது.

Association for Democratic Reforms (ADR) அமைப்பின் அறிக்கையின்படி, 2017-18 நிதியாண்டுக்கும் 2021-22 நிதியாண்டுக்கும் இடையே தேர்தல் பத்திரங்கள் மூலம் தேசிய கட்சிகள் பெற்ற நன்கொடைகள் 743 சதவீதம் அதிகரித்துள்ளது. மறுபுறம், இதே காலகட்டத்தில் தேசிய கட்சிகளுக்கு கார்ப்பரேட் நன்கொடைகள் 48 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளன.

இந்த ஐந்தாண்டுகளில், 2019-20 ஆம் ஆண்டில் (இது மக்களவைத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு), தேர்தல் பத்திரங்கள் மூலம் அதிகபட்சமாக ரூ.3,439 கோடி நன்கொடையாக வந்துள்ளதாக ஏடிஆர் தனது ஆய்வில் கண்டறிந்துள்ளது. இதேபோல், 2021-22 ஆம் ஆண்டில் (11 சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன), அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் மூலம் சுமார் 2,664 கோடி ரூபாய் நன்கொடை பெற்றன.

**தேர்தல் ஆணையம் மற்றும் ரிசர்வ் வங்கி என்ன சொல்கிறது?**

2019 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில், தேர்தல் பத்திரங்கள் அரசியல் நிதியில் வெளிப்படைத் தன்மையை முடிவுக்குக் கொண்டுவரும் என்றும் அவை இந்திய அரசியலில் செல்வாக்கு செலுத்த வெளிநாட்டு கார்ப்பரேட் சக்திகளை அழைப்பதற்கு சமம் என்றும் தேர்தல் ஆணையம் கூறியிருந்தது.

இதன்மூலம், அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கும் நோக்கத்திற்காக மட்டுமே உருவாக்கப்படும் ஷெல் நிறுவனங்களை திறக்க வாய்ப்பு அதிகரிக்கும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியிருந்தது.

ஏடிஆர் மனுவின்படி, கறுப்புப் பணப் புழக்கத்தை அதிகரிக்க, பணமதிப்பழிப்பு மற்றும் எல்லை தாண்டிய மோசடியை அதிகரிக்க தேர்தல் பத்திரங்கள் பயன்படுத்தப்படலாம் என்று இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) பலமுறை எச்சரித்துள்ளது.

தேர்தல் பத்திரங்களை ‘நிதி வழங்குவது குறித்த தெளிவில்லாத முறை’ என்று குறிப்பிட்ட ரிசர்வ் வங்கி, இந்த பத்திரங்கள் நாணயம் போன்று பலமுறை கை மாறுவதாலும் அது யார் பெயரில் வழங்கப்படுகிறது என்பது தெரியாததாலும் இந்த பத்திரங்கள் மூலம் பண மோசடி நடக்கலாம் என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்திருந்தது.

**எதிர்க்கட்சி தலைவர்கள் கூறுவது என்ன?**

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்றுள்ளார். தனது எக்ஸ் தள பதிவில், ‘தேர்தல் பத்திரங்கள் என்று அறிமுகப்படுத்தப்பட்டதோ அன்றே இது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று காங்கிரஸ் கூறியது. மேலும், எங்களின் 2019ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் மோடி அரசின் இந்த சந்தேகத்திற்குரிய திட்டத்தை ரத்து செய்வதாக உறுதியளித்திருந்தோம்.

மோடி அரசின் “கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றும்” இந்த திட்டத்தை, அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று கூறி உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை நாங்கள் வரவேற்கிறோம்.

மோடி அரசு, பிரதமரின் அலுவலகம் மற்றும் மத்திய நிதியமைச்சர் ஆகியோர் பாஜகவின் கஜானாவை நிரப்புவதற்காக ஆர்பிஐ, தேர்தல் ஆணையம், நாடாளுமன்றம் மற்றும் எதிர்கட்சிகளை எவ்வாறு மோசமாக நடத்தினார்கள் என்பதைப் பார்த்தோம்.

இந்த திட்டத்தின் கீழ் 95வீத நிதியை பாஜக தான் பெற்றது என்பதில் ஆச்சரியமில்லை. வருங்காலத்தில் மோடி அரசு இதுபோன்ற நயவஞ்சக யுக்திகளை பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, உச்ச நீதிமன்றத்தின் பேச்சைக் கேட்கும் என்று நம்புகிறோம்.” என்று பதிவிட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இது குறித்து தனது எக்ஸ் தள பக்கத்தில், “நரேந்திர மோடி அரசின் ஊழல் கொள்கைகளுக்கு மற்றுமொரு சான்று தான் இந்த தேர்தல் பத்திரங்கள். தேர்தல் பத்திரங்களை, லஞ்சம் மற்றும் கமிஷன் வாங்கும் ஒரு வழியாக பாஜக மாற்றியது. இதற்கு இன்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது” என்று கூறியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில், “தேர்தல் பத்திரங்கள் அரசியலமைப்பிற்கு முரணானது என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் சரியாகவே கூறியுள்ளது. வெளிப்படையான தேர்தல் செயல்முறை மற்றும் அமைப்பின் நேர்மையை இது உறுதி செய்யும். இந்தத் தீர்ப்பு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஒரு சமமான தேர்தல் களத்தை அளித்துள்ளது, மேலும் ஜனநாயகத்தையும் மீட்டெடுத்துள்ளது. அமைப்பின் மீது சாமானியர்களுக்கு இருக்கும் நம்பிக்கையையும் இது உறுதி செய்துள்ளது.” என்று பதிவிட்டுள்ளார்.

# இந்தியாவின் டிஜிட்டல் பணப் பரிமாற்ற...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

**இந்திய பிரதமர் நரேந்திர மோதி கருத்து**

“இந்திய பெருங்கடலில் மூன்று நட்பு நாடுகளுக்கு இன்று சிறப்பு நாளாகும். நாங்கள் எங்கள் வரலாற்று உறவுகளை நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் இன்று இணைக்கின்றோம். இந்த ரூபே (RuPay) திட்டத்தின் ஊடாக இலங்கை மற்றும் மொரிஷியஸ் நன்மை அடையும் என எதிர்பார்க்கின்றோம்.

இந்தியாவின் அண்டைய நாட்டு முதல் கொள்கை என்ற அடிப்படையில் டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு இந்தியாவில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த இரண்டு நாடுகளுடனும் புது டெல்லியின் அதிகரித்து வரும் இருதரப்பு பொருளாதார உறவுகளுக்கு மத்தியில் இலங்கை மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் இந்திய சேவை தொடங்குகின்றது.” என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.





